கடவுள் துணை.

# தமிழ்வரலாறு.

## முற்பாகம்.


தஞ்சாவூர்

K. S. ஸ்ரீநிவாஸ பிள்ளை

எழுதியது.


மூன்றாம் பதிப்பு.


தஞ்சை;

பூர்ண சந்திரோதய பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1927.

விலை] 0-10 [[illegible].

# முன்னுரை.

தமிழ் வரலாறு என்னும் இப்புத்தகத்தின் பிற்பாகம் தனியே அச்சிடப்பட்டிருக்கிறது. இதிலடங்கியவை இன்னவென்பதையும், இதனை யெழுதிவரும் எனது நோக்கம் இன்னதென்பதனையும் பின்வருமவற்றால் அறியலாம்.

தமிழ்ப்புலவர்களும் அவர்கள் இயற்றிய நூல் முதலியனவும்:— தோன்று தொட்டு நாளிது வரையிலுள்ள காலத்தை நான்குபதிகளாக்கி, ஆதிமுதல் சங்கத்திறுதிக்காலம் வரையிலுள்ள அளவை முதலாங்காலப் பகுதியாகவும், சங்கத்திறுதிக்காலம் முதல் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் ஈறுவரையிலுள்ள காலஅளவை இரண்டாங் காலப் பகுதியாகவும், கி. பி. பதினோராம் நூற்றாண்டின் தொடக்க முதற் பதினான்காம் நூற்றாண்டின் ஈறுவரையிலுள்ள கால அளவை மூன்றாங்காலப் பகுதியாகவும், கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கம்முதல் நாளிது வரையிலுள்ள காலத்தை நான்காங் காலப் பகுதியாகவும் அமைத்திருக்கிறேன்.

நாம் இப்பொழுது அளவிட்டு அறிவதற்கு அரிதாயுள்ள பல்லூழி காலங்களாய்த் தமிழ்மொழி மேன்மையான நிலைமையிலிருந்து வந்திருக்கிறது. அகத்தியமுனிவர் தமிழ்நாடு வருவதற்கு முன்னரே அது தழைத்தோங்கி வளர்ந்திருந்தது என்றாலும், அவருக்குமுன் இந் நாட்டிலிருந்த புலவர்கள் இன்னார் என்றாவது, அவர்கள் இயற்றிய நூல் முதலியவை இன்ன என்றாவது அறியக்கூடவில்லை. அம்முனிவர்காலந் தொடங்கி நாளிதுவரை தமிழ்மொழியை அலங்கரித்த புலவர்கள் எண்ணிறந்தவர். அவர்கள் எல்லாருடைய சரித்திரத்தையும் எழுதி முடிப்பது என்போலியர்க்கு இயலாததொன்றாம். தமிழுக்குப் பேரணிகலமாயுள்ள சான்றோர் ஒருவர் தமிழ் நாவலர்கள் சரித்திரத்தைப் பலஆண்டுகளாய்த் தமக்கு அவகாசம் கிடைத்த காலங்களில் எழுதிவருவதை அறிய

மிகுந்த ஆனந்தமுடையவனுயிருக்கிறேன். ஈண்டு நான் எழுத முயல்வது முக்கியமான புலவர்களிற் சிலரைப் பற்றி மட்டுமே. அதிலும், அவர்கள் இருந்த காலத்தை நிர்ணயிக்க முயல்வதே எனது முக்கிய நோக்கம்.

தமிழறிஞர் பலர், பலவகை ஆராய்ச்சிகளைச் செய்து தங்கள் ஆராய்ச்சியின் பயனாக உள்ளவற்றைத் தமிழ்ப் பத்திரிகைகளிலும், ஆங்கிலப் பத்திரிகைகளிலும், சிறிய புத்தகங்களிலும், பெரிய புத்தகங்களிலும் வெளியிட்டிருக்கின்றனர். அவைகள் சிதறிக்கிடக்கின்றமையால் நான் அறிந்த அளவையில் அவற்றைத்திரட்டி எனது ஆராய்ச்சியின் பயனாக உள்ளவற்றையும் அவற்றுடன்கூட்டி இச்சிறுபுத்தகத்தை எழுதுகின்றேன். ஆராய்ச்சி இப்பொழுது இருக்கிற நிலைமையில் ஒன்றையும் முடிவுரையாகக் கொள்வதற்கில்லை. சில நண்பர்களின் தூண்டுதலால் இதை எழுதத் தொடங்கினேன். குறைந்த கல்வியறிவையுடைய நான், அறிஞர்கள் எழுதியிருப்பவற்றை நன்குணராமையால், எழுதுவதிற் பல தவறுதல்கள் காணப்படலாம். குற்றங்கள் உள்ளனவற்றை எனக்குக் கற்பிப்பது கிரமமாகும். இதை வாசிக்கும் அறிஞர்கள் எனது தவறுதல்களைச் சுட்டிக்காட்டி, கூட்டியும் குறைத்தும் மாற்றியும் செய்யவேண்டுவன இவை என்பதை எனக்குத் தெரிவிப்பார்களானால் அவர்கள் சொல்பவற்றை வந்தனத்துடன் சிரமேற்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன். யாதேனும் ஒரு பத்திரிகைக்குத் தங்கள் அபிப்பிராயத்தை எழுதி அதனுடன் நிறுத்திவிடுவார்களானால் நான் அவர்கள் எழுதியதை அறிந்து திருத்திக்கொள்வதற்கு இடமில்லாமற் போய்விடலாம். எங்ஙனமேனும் தமிழின் உண்மைச் சரித்திரம் வெளிவரவேண்டியதொன்றே எனது நோக்கம்.

இப்பதிப்பை வெளிப்படுத்துவதில் முழு முயற்சியும் எடுத்துக்கொண்டதற்காகத் தஞ்சை கல்யாணஸுந்தரம் ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதரும் தமிழ்ப்பாஷையில் மிகத் தேர்ச்சியுள்ளவருமான ப்ரஹ்மஸ்ரீ S. சுப்பிரமணிய சாஸ்திரியவர்களுக்கு மிகவும் நன்றி பாராட்டுகிறேன்.

தஞ்சாவூர்,
15—10—27.

இங்ஙனம்,
K. S. ஸ்ரீநிவாஸன்.

உ

சிவமயம்.

# தமிழ் வரலாறு.

## முற்பாகம்.

"ஆதியிற் றமிழ்நூ லகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே."

தமிழ்நாட்டெல்லை:—தமிழ் நாடென்பது தமிழ்மொழி வழங்கும் நாடு. அதற்கு முற்காலத்து எல்லையாவன வடக்கும் தெற்கும் வேங்கடமலையும் குமரியாறும், மேற்கும் கிழக்கும் கடலும் ஆம். பண்டைத் தமிழ் நூல் ஆசிரியர்களுள் "வடவேங்கடந் தென்குமரி, ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து" எனப் பனம்பாரனாரும்; "வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென், றிந்நான் கெல்லை தமிழது வழக்கே" எனச் சிகண்டியாரும்; "வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும், வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென், றந்நான் கெல்லை யகவயிற் கிடந்த, நூலது முறையே வாலிதின் விரிப்பின்" எனக் காக்கை பாடினியாரும் கூறியவும் இஃதே. குடக்குங் குணக்கும் பௌவம் என்றதனாலும், தெற்கட்குமரி என்றதனாலும் தெற்கெல்லை பௌவம் அன்றென்பது தானே போதரும். குமரி ஓர் யாற்றின் குறி என்பது தமிழறிஞர் பலரும் அறிந்ததே.

தமிழ்நாட்டின் உட்பிரிவுகள் :—தமிழ்நாடு அக்காலத்துப் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததென்பது "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தானே விளங்கும். இதை உரையாசிரியர்கள் 'செந்தமிழ் நாடு ஒன்று ; அதைச்சார்ந்த கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டு' எனத் தொல்காப்பியர் கூறியதாகப் பொருள்கொண்டு "தென்பாண்டி குட்டங் குடங் கற்கா வேண்பூழி, பன்றி அருவா வதன்வடக்கு—நன்றாய, சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர், ஏதமில் பன்னிருநாட் டெண்" என நாட்டின் பெயர்களைக் கூறினர். செந்தமிழ்நாடென்பதை ஒருசாரார் பாண்டிநாடென்றும், ஒரு சாரார் சோழநாடென்றும் சொல்வர். பாண்டிநாடென்பார் கூற்று "செந்தமிழ் நாடே, சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ், சௌந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ், சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கு, மங்கலப் பாண்டி வளநா டென்ப" என்பது. சோழநாடென்பார் கூற்று, "செந்தமிழ் நாடே, மன்ற வாணன் மலர்திரு வருளாற், றென்றமிழ் மகிமை சிவணிய செய்த, அடியவர் கூட்டமு மாதிச் சங்கமும், படியின்மாப் பெருமை பாவுறு சோழனுஞ், சைவமா தவருந் தழைத்தினி திருக்கு, மையறு சோழ வளநா டென்ப" என்பது. சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் "செந்தமிழ் நிலமாவன, வைகையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாம்." என்பர். கொடுந்தமிழ் நாடுள்படத் தமிழ்நாட்டின் பகுதிகளை அடுத்த பக்கம் படத்திற் பார்க்க.

தமிழ்நாடு குன்றியது :—பிற்காலத்தில் குமரியாற்றுக்குத் தெற்கிருந்த நாடனைத்தையும் கடல்கொண்டது. அந்நாட்டைத் தமிழ்நாடென்று சிலரும், அன்றென்று சிலரும் கூறுவர். அந்நாடிருந்த இடம் இப்பொழுது கடலாயிருத்தலின் அவ்விருவகையார் கூற்றும் எவ்வாறாயினும் ஆகுக என்று விடலாயின. மேலைக் கடற்கரையைச் சார்ந்த வேண், குட்டம், குடம், பூழி என்னும் நாடுகளும் ; கற்கா, சீதம் என்னும் நாடுகளும் தமிழ் வழக்கு ஒழித்தன. இவற்றுள், தெற்கண் உள்ளவற்றைச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய மலையாளம் என்னும் புதுமொழி கவர்ந்துகொண்டது.

# தமிழகம்.



அம்மொழிக்கு எழுத்துக் கற்பித்தவர் எழுத்தச்சன் என்பார். அவர் வம்சத்தினர் இன்றும் அப்பெயராலழைக்கப்படுகின்றனர். மணிமேகலை, சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை, ஆதியுலா முதலிய நூல்கள் பிறந்த நாட்டில் தமிழ் வழக்கு இங்ஙனம் நின்றது. வடக்கண் உள்ள நாடுகளைக் கன்னடமொழி கவர்ந்து கொண்டது. தமிழ் நாட்டின் வட எல்லையைச் சார்ந்த பிரதேசத்தில் வடுகு மொழி பரவியது. அப் பிரதேசத்திலுள்ள வேங்கடம், காளத்தி முதலிய இடங்களில் அரசாங்க நடவடிக்கை உள்ளிட்டு வடுகில் நடைபெறுகின்றன. குணகடற்கரையில் இருந்த காவிரிப்பூம் பட்டினம் முதலிய பல இடங்களைக் கடல் விழுங்கியது. இவ்வாறு எல்லாத் திசைகளிலும் தமிழ் நாட்டைப் பிறமொழிகளும் கடலும் கவர்ந்தன. இவற்றால் பிறமொழிகள் அகன்று பரவவும், தமிழ் நாடு அளவிற் குன்றவும் நேர்ந்தன.

தமிழர் இந்நாட்டிற் குடியேறினவரா? :—சரித்திர ஆராய்ச்சிக்காரரிற் சிலர் 'தமிழர் இமயமலைக்கு வடபக்கத்துள்ள நாட்டிலிருந்து வங்கநாடு வந்து தங்கி, அங்கிருந்து இந்நாட்டிற்கு வந்தனர்' என்று கூறுவர். சிலர் 'இந்தியாவின் வடமேற்கு மூலையிலிருந்து வந்து, பாஞ்சால நாட்டிலே தங்கி, இந்நாட்டிற்கு வந்தனர்' என்பர். சிலர் 'குமரிக்குத் தெற்கே பல்லூழிகாலங்களுக்கு முன் லெமூரியா கண்டம் என்பதோர் அதிக விசாலமுள்ள நிலப் பரப்பிருந்தது; அதிலிருந்து வந்தனர்' என்பர். இவ்வாறு குடியேறிய தமிழர் 'தாம் வருதற்கு முன்னமே இந்நாட்டில் இருந்த மக்கள் சிலரைக் காடு மலைகளுக்குத் துரத்தினர்; சிலரை அடிமைகளாக்கினர்' என்பது அவர் கொள்கை. அக்கூற்றை நம்பினோர் இந்நாட்டில் உளர் என்பதற்கு ஆதித்திராவிட சங்கங்கள் மூலைதோறும் கிளம்புவதே சான்றாம். தமிழர் இந்நாட்டிற் குடியேறினவர் என்பார் கதைகளுக்கு அவர்கள் காட்டும் ஆதாரங்கள், அவர்களது மனோவியாபாரத்தாற் கற்பிக்கப்பட்டவை என்பது நுண்ணிய ஆராய்ச்சி உடையார்க்குத் தெள்ளிதின் விளங்கும். சில ஐரோப்பியர் தங்கள் நாட்டு அனுபவத்தைக்கொண்டு ஒவ்வொரு நாட்டிலும் இக்காலத்து இருக்கும் மக்கள் வேறு நாட்டிலிருந்து குடியேறின

வர்கள் என்பது உண்டு. அவர் கொள்கையைப் பின்பற்றியோர் கூற்றேயாம் இஃதென்பதற்கு ஐயமென்னே? அவர் கூற்றுண்மையா யின் 'தமிழர் இந்நாடு வருவதற்குமுன் இந்நாட்டிலிருந்த மக்கள் எந்நாட்டிலிருந்தும் இந்நாடு போந்தனர்?' அவர் வருவதற்கு முன் னர் இந்நாட்டிலிருந்தோர் எந்நாட்டினின்றும் இந்நாடு வந்தனர்?' என்பனபோன்ற சங்கைகள் உண்டாகி அநவஸ்தாதோஷம் வரும். மேலும், தமிழர் வருவதற்குமுன் இந்நாட்டில் இருந்தோர்க்கு மதம், பாஷை, ஒழுகலாறு முதலியன தனியே இருந்திருக்கவேண் டுமே; அவற்றின் அடையாளம் எங்கேயாவது காணப்படுகின்ற னவா? இக்காலத்து வழங்கும் மொழி முதலியன அவர்களுடை யனவென்றால், தமிழர் மதம், பாஷை முதலிய எவ்வாறாயின? தமிழ் நாடெங்கணும் பல்லூழிகாலங்களாய்த் தமிழ்மொழி ஒன்று தானே வழங்கி வந்திருப்பதாக அறியப்படுகிறது? மலை, நாடு, யாறு, ஊர் முதலியவற்றிற்குத் தமிழ்ப்பெயர் மட்டுமே காணப்படுகின் றன. பின் வந்த ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்ட மாறுதல்களைத் தவிர பெயர், கொள்கை, பழக்கம், ஒழுக்கம் முதலியன ஒன்றாகவே உள்ளன. மக்களுள் உயர்வு தாழ்வு ஏற்பட்டுப் பல பிரிவுகள் காணப்படுகின்றனவே எனில், எந்நாட்டில் அவை இல்லை என்ற வினு விடையாக எழுகின்றது. ஒரு நாட்டில் ஒரு ஜாதியாரே இருப்பினும் பிரிவுகள் ஏற்பட்டு வேற்றுமை காணப்படுவது இயல்பே. இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளில் இத்தகைய வேற்றுமை இல்லையா? அந்நாட்டிலுள்ள பிரபுக்கள் சுரங்கவேலை, தோட்டிவேலை முதலிய செய்பவரோடு கொள்ளலும் கொடுத்த லும் செய்கிறார்களா? அல்லது அவர்களோடு சமமாகவேனும் உணவருந்துகிறார்களா? ஒரு நாட்டில் ஒருவகை வேறுபாடிருந் தால் மற்றொரு நாட்டில் மற்றொருவகை வேறுபாடிருக்கிறது. எவ் வித வேறுபாடுகளும் இல்லாத நாடு இனி உலகத்தில் உண்டாக வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் உயர்ந்தவும் தாழ்ந்தவுமான பல காரியங்களும் நடந்தேறினாலன்றி நாட்டின் பொதுக்காரியங்கள் நடைபெறாவே. முதலில் ஒருவர் ஒரு காரியத்தைச் செய்வதும், நாளடைவில் அது செய்வோரது பரம்பரை வழக்கில் வருவதும், சரித்திர ஆராய்ச்சி செய்வோர் அறிந்தனவே, தமிழ் நாட்டில் உள்

ளனவும் இவ்வாறு வந்தனவே. இதனால் இவ்வாறே வேறுபாடுகள் இருத்தல் வேண்டும் என்று சொல்வதாக நினைத்தல் கூடாது. இப்பொழுதுள்ள வேறுபாடுகள் எவ்வாறு அமைந்தன என்பதை விளக்குவதற்காகவே இது கூறப்பட்டது. குமரி முதல் இமயம் வரையிலுள்ள நாட்டில் ஓரிடத்திலுள்ளதற்கும் மற்றோரிடத்திலுள்ளதற்கும் பேதம் அதிகம். ஓரிடத்தில் ஒரு காலத்திற் பார்க்கப்படும் வேறுபாட்டிற்கும் மற்றொரு காலத்திற் பார்க்கப்படும் வேறுபாட்டிற்கும் பேதம் அதிகம். நிற்க, சிலர் 'மக்களை அடிமையாகக் கொண்டு பண்டங்களைப்போல் விற்பது மேற்சொன்னதில் அடங்காது' என வாதித்து நான் சொன்னதை மறுப்பர். எனினும், அரிச்சந்திரன் பெண்டு பிள்ளைகளை விற்றதற்கு அவர் என்ன சொல்வார்? அவர்கள் வேறு ஜாதியினராயிருந்து அவனுக்கு அடிமைப்பட்டவர்களா? அஃது இந்நாட்டு வழக்கத்தைக் காட்டும். தமிழர் இந்நாட்டிற் குடியேறினவர் என்பார் தம் கூற்றுக்குத் தக்க ஆதாரங்காட்டும்வரை தமிழர் இந்நாட்டினரே என்றும், தமிழர்களுக்குள் இப்பொழுது வேற்றுமை காணப்பட்டாலும் ஆதியில் அவர் ஒரு கூட்டத்தவரே என்றுங் கொள்வோம்.

தமிழ் என்னும் பெயர் தமிழ் மொழியே:—தமிழ் என்னும் மொழியைச் சிலர் திராவிடம் அல்லது திரமிளம் என்னும் வடமொழிச் சிதைவு என்பர். சிலர் அதை மறுத்துத் தமிழ் என்னும் பெயர் அமைந்த வகையைப் பலவாகக் காட்டுவர். ழகரத்தை உச்சரித்தறியாத ஆரியர் திராவிடம் அல்லது திரமிளம் என்றதில் நின்றும் தமிழ் என்னும் பெயர் பிறந்தது என்பது சிறிதும் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. ஸ்ரீமான் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் இதைப்பற்றி எழுதியிருப்பது கவனிக்கத்தக்கது. அது "தமிழ் என்பது தென்மொழிக்குத் தென் சொல்லாகிய பெயரேயாமெனக் கொள்க. இதை யொழித்துத் திராவிடமென்னும் வடமொழியே தமிழ் என்றாயதெனச் சற்றும் ஆலோசனையின்றிக் கூறுவாருமுளர். அவர் மதம் சாலவும் நன்றாயிருந்தது !! தமிழில் தமிழ் என்னும் பதம் வாராமுன்னர்ச் சமஸ்கிருதத்தில் திராவி

டம் என்னும் மொழி உளதாகில் அப்பெயர் எப்பொருளை உணர்த் திற்ரோ? உலகத்தில் எஞ்ஞான்றும் பெயரா பொருளா முந்தியது? பொருளெனில் அப்பொருள் இருக்கும் இடத்தா, அஃதில்லாத பிறிது தேயத்திலா, அதன் பெயர் முன்னர் நிகழும்? இஃதுணராது தமிழ் வழங்கிய இடத்தில் தமிழுக்கோர் பெயரிருந்ததில்லை யென் றுஞ் சமஸ்கிருதத்திலிருந்து அதற்குப் பெயர் வந்ததென்றுஞ் சொல்வது யார்க்கும் நகை விளைக்குமே. இஃதொன்ரோ! யாதொரு தமிழ் மொழியில் இரண்டோரெழுத்துச் சமஸ்கிருத மொழிக் கொப்ப நிகழுமாயின் அஃது சமஸ்கிருதத்தினின்று பிறந்ததெனச் சாதிக்கின்றனர். மேலைத்தேசவாசிகளின் இங்கிலீஷ் முதலிய அந் நிய பாஷைகளில் இன்றியமையா வீட்டுச்சொற்களாகித் தந்தை தாயரைக் குறிக்கும் பாதர் மதர் என்பனவாதியும் வடமொழி அடி யாய்ப் பிறந்தவென்பரா? அப்படியாயின் வடமொழியைக் காணு முன் அத்தேசத்தாரெல்லாம் தாய்தந்தையரை அழைத்தற்கோர் வீட்டுச்சொல் இல்லாதிருந்தனரென்றன்ரோ முடியும்? ஆண்டுள்ள பாதர் மதர் ஒப்ப ஈண்டும் பிதா மாதா ஆயிற்றெனில் யாது குற்றம்? தருக்கத்திற் காகதாலீய நியாயத்தி னுண்மை அறியாமலும், ஆரிய மொழிக்கும் அதன் அயல்நாட்டு மொழிகளுக்கும் உள்ள சம்பந்த சார்புகளின் காரணத்தை ஆராயாமலும் இவ்வாறு கழறும் இவர் கற்பனைக்கு யாது செய்யலாம்? இவர் வாய்க்கு விலங்கிட யாரான் முடியும்!" என்பது.

தமிழினது தோன்மையும் மேன்மையும் :—பல்லூழி காலங்க ளுக்குமுன் வடதிசை நின்றும் முதற்கண் தமிழ்நாடு போந்த ஆரி யர் தலைவருள் முதன்மை வாய்ந்தவர் அகத்தியமாமுனிவர். முன் னில்லாத தமிழ்மொழியைப் பிறப்பித்தவர் அகத்தியமாமுனிவர் எனக் கூறுவார் சிலருளர். "தமிழெனுமளப்பருஞ் சலதிதந்தவன்" எனக் கம்பரும், "அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு" என வில்லிபுத்தூரார் மகன் வரந்தருவாரும் சொல்லியிருப்பன இவர் கூற்றை ஆதரிப்பனபோலத் தோன்றும். அகத்தியனுர் தென்னுடு வருவதற்கு முன்னரே தமிழ்மொழி தழைத்துப் பரவியிருந்ததென் பதையும், அவர் அம்மொழியைச் சிவபெருமானிடத்தும், குமாரக்

கடவுளிடத்தும் கற்றனரென்பதையும் அடியிற்கண்ட செய்யுட்க ளும் பிறவும் காட்டும். அவை,

"நின்றவனை வந்தநெடி யோனடி பணிந்தான்
அன்றவனு மன்பொடு தழீஇயழுத கண்ணன்
நன்றுரைசெய் யென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான்."

(கம்பராமாயணம்—அகத்தியப்படலம்.)

"ஆதரஞ்சேர் குறுமுனியு மெனையொன் றுக்கி
அருள்செய்தா யருள்செய்த படியே செய்வல்
ஓதருந்தென் பூமிதமிழ்ப் பூமி யென்பார்
ஒண்டமிழிற் குரியவெலா மடிமைக் கிங்கே
போதமுற வறிவித்தல் வேண்டு மென்று
போற்றுங்கா லெழுத்துச்சொற் பொருண்முன் னான
நீதியுடைச் சூத்திரங்க ளறியும் வண்ணம்
நெறியின்க ணறிவித்தாய் நேசங் கூர்ந்தே."

(பழைய திருவிளையாடல்—குறுமுனிக்குத் தமிழுரைத்தது.)

"பண்டொரு போதுவெள்ளிப் பனிவரை யிடத்துன் பாங்கர்ப்
புண்டவழ் குலிசக் கோமான் பூமகன் மாயப் புத்தேள்
அண்டருஞ் சனகனாதி யருந்தவர் பிறரு மீண்டிக்
கொண்டன ரிருந்தா ரிந்தக் குவலயம் பொறாது மாதோ."

"தாழ்ந்தது வடகீ ழெல்லை யுயர்ந்தது தென்மேற் கெல்லை
சூழ்ந்தது கண்டு வானோர் தொழுதுனைப் பரவி யைய
ஊழ்ந்திடு மரவம் பூண்டோ யொருவனின் றெப்பா னங்கே
வாழ்ந்திட விடுத்தா லிந்த வையநேர் நிற்கு மென்றார்."

"பைத்தலைப் புரட்டு முந்நீர்ப் பௌவமுண் டவனே யெம்மை
யொத்தவ னனையான் வாழ்க்கைக் குரியளா கியவு லோபா
முத்திரை யிமவான் பெற்ற முகிழ்முலைக் கொடியொப் பாளென்
றத்திரு முனியை நோக்கி யாயிடை விடுத்தா யன்றே."

"விடைகொடு போவா னென்றை வேண்டினு னேகுந் தேயந்
தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப வந்த நாட்டின்
இடைபயின் மனித்த ரெல்லா மின்றமி ழாய்ந்து கேள்வி
உடையவ ரென்ப கேட்டார்க் குத்தர முரைத்தல் வேண்டும்."

"சித்தமா சகலவந்தச் செந்தமி ழியனு றன்னை
அத்தனே யருளிச் செய்தி யென்றன னனையான் றேற
வைத்தனை முதனு றன்னை."

(பரஞ்சோதி திருவிளையாடல்—கீரனுக்கிலக்கணமுபதேசித்த படலம்.)

"எவ்வினையு மோப்புதலால் திராவிடமென் றியல்பாடை
எவ்வமறப் புதிதாக யான்வகுப்ப நல்கியது
எவ்வருணத் துள்ளார்க்கு மெளிதாகப் புத்தேளிர்
எவ்வெவர்க்குஞ் சுவையமிழ்தி னினிதாகச் செய்தருள்வாய்."

(காஞ்சிப்புராணம்—தழுவக்குழைந்த படலம்.)

(இதன் பொருள் :—'எவ்வகைப்பட்ட வினைகளையும் ஓட்டுத லாலே திராவிட மென்னும் நாமம்பெற்றுப் பழையதாகி நடக்கின்ற தமிழைப் பின்னர்ப் புதுக்கிப் புதியதாக யானுலகத்திற்கு உபகரிக் கத் தேவரீர் அருளியது எல்லாவருணத்தார்க்கும் இலேசாகவும், தேவர்கள் யாவருக்கும் சுவையைத்தரும் அமிழ்தினும் இனியதாக வும் செய்தருளவேண்டும்' என்பது.) என்பன.

பின்வரும் செய்யுட்களும் அகத்தியமுனிவர், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளிடத்துத் தமிழ் கற்றதைக் காட்டும். அவை,

"ஆதியிற் றமிழ்நூ லகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே." சேனாவரையர்.

"தழற்புரை சிறக்கடவுள் தந்ததமிழ் தந்தான்." கம்பர்.

"விடையுகைத்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்
வடமொழிக் குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்
திடமுறுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்
மடமகட்கரங் கென்பது வழுதிநா டன்றோ."

(பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல்—நாட்டுப் படலம்.)

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்."

(காஞ்சிப்புராணம்—தழுவக்குழைந்த படலம்)

என்பன.

பின்வருவன அகத்திய முனிவர் முருகக்கடவுளிடத்துத் தமிழ் கற்றதைக் காட்டும். அவை,

"அகத்தியனார்க்குத் தமிழைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய அறுமுகக்கடவுள் வரைப்பு."

(சிவஞான முனிவர்—தொல்காப்பியப் பாயிர விருத்தி.)

"அருமறையா கமமங்க மருங்கலைநூ றெரிந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருவை."

(சிவஞான சித்தியார்—பரபக்கம்.)

என்பன. பழநித்தலபுராணத்தும் இது கூறப்பட்டுள்ளது. வேறு பல ஆதாரங்களுமுள.

முனிவர் தென்னாடுபோந்து அகத்தியம் இயற்றுதற்கு முன்னரே வழக்கு, செய்யுள் என்னும் இருவகையிலும் தமிழ் பெருகி இருந்ததென்பதை அகத்திய சூத்திரங்களே விளக்கும். அகன்று விரிந்த இலக்கிய மில்லாவிட்டால் முனிவர் பன்னீராயிரம் சூத்திரங்களடங்கிய பேரகத்தியம் என்னும் இலக்கண நூலை இயற்ற எவ்வாறு இயலும்?. பின்வருவன அகத்திய சூத்திரங்கள்:

"இலக்கண மென்ப திலக்கிய முறையுற
வைத்த தென்று வழங்கப் படுமே."

"இலக்கிய மின்றி யிலக்கண மின்றே
எள்ளின் றாகி லெண்ணெயு மின்றே
எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடு மிலக்கணம்."

அகத்தியம் முத்தமிழிலக்கணமும் அடங்கியது. பன்னீராயிரம் சூத்திரங்களடங்கிய தென்றால் அதன் பெருமையை என்னென்று கூறுவது? அத்துணைப்பெரிய இலக்கண நூல் உலகந் தோன்றியது தொடங்கி இது காறும் யாதொருபாஷையிலும் இருந்ததாக அறியக்கூடவில்லை. அந்த இலக்கண நூல் இயற்றப்படுவதற்கு முன்னர் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் இலக்கியங்களும் எவ்வளவு வளர்ச்சியை அடைந்திருக்கவேண்டும்? அந்நிலைமையை அடையத் தமிழ் அதற்குமுன் எவ்வளவு காலமாக நடைபெற்றிருக்க வேண்டும்? என்பன இங்கு ஆராயற்பாலன. முனிவர் தமிழ்ச்சங்கத்தை அமைத்த காலத்துச் சிறந்த தமிழ்ப் புலவர்கள் ஆயிரக்கணக்கில் அதன் அங்கத்தினர்களாயிருந்து அதற்குப் பெருமையையும் புகழையும் ஈட்டினரென்றால் அதுவும் தமிழின் பழையபெருமைக்குத் தக்கதொரு சான்றாகும்.

அகத்திய முனிவர் தென்னாடு வந்த காலம் எது என்பதை ஆராய்வோம். வால்மீகி முனிவரியற்றிய ராமாயணத்தில் ஸ்ரீராமன் அரணிய வாசம் செய்யப்புகு முன்னரே, அதாவது இராம ராவண யுத்தத்திற்கு முன்னரே, அகத்திய முனிவர் தென்னாட்டில் இருந்தனர் என்பது சொல்லப்பட்டுள்ளது. வால்மீகி ராமாயணத்தை 'ஆதிகாவியம்' என யாவரும் கூறுவர். அதாவது ராமாயணம் செய்யப்படுவதற்கு முன் சமஸ்கிருதபாஷையில் சுலோகங்களே இருந்ததில்லை என்பதாம். சுலோகமே இல்லாதிருந்ததென்பதினால் காவியம் இல்லை என்பது வெளிப்படை. அந்த ஆதிகாவியத்திலே தமிழிலக்கணமியற்றிய அகத்தியர் பொதிகையிலிருப்பதும் தமிழின் தொன்மைக்குச் சான்றாம். கிஷ்கிந்தா காண்டம் நாற்பத்தோராவது சர்க்கத்தில் சுக்கிரீவன் சீதாபிராட்டியாரைத் தேடிவருமாறு வானர வீரர்களுக்கு உத்தரவு கொடுக்குமிடத்திற் பயின்றுவருவன அச் சுலோகங்கள். அவை,

"𑌤𑌥𑍈𑌵𑌾𑌨𑍍𑌧𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌚𑍋𑌲𑌾𑌨𑍍 𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌾𑌨𑍍
𑌸𑌕𑍇𑌰𑌲𑌾𑌨𑍍 ‖ ௧௨ ‖ 𑌅𑌯𑍋𑌮𑍁𑌖𑌶𑍍𑌚 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌪𑌰𑍍𑌵𑌤𑍋

𑌯𑌾𑌤𑌾𑌶𑍍𑌚𑌾𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌾𑌃 । 𑌵𑌿𑌵𑌿𑌧𑌶𑌿𑌖𑌰𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌚𑌿𑌤𑍍𑌰𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌕𑌾𑌨𑌨𑌃 । 𑌸𑌚𑌨𑍍𑌦𑌨𑌵𑌨𑍋𑌦𑍍𑌦𑍇𑌶𑍋 𑌮𑌾𑌰𑍍𑌗𑌿𑌤𑌵𑍍𑌯𑍋 𑌮𑌹𑌾𑌗𑌿𑌰𑌿𑌃 ॥ ௧௪ ॥ 𑌤𑌤𑌸𑍍𑌤𑌾𑌮𑌾𑌪𑌗𑌾𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌸𑌲𑌿𑌲𑌾𑌂 𑌶𑌿𑌵𑌾𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌥 𑌕𑌾𑌵𑍇𑌰𑍀𑌂 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌮𑌪𑍍𑌸𑌰𑍋𑌗𑌣𑍈𑌃 ॥ ௧௫ ॥ 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍀𑌨𑌂 𑌨𑌗𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑍇 𑌮𑌲𑌯𑌸𑍍𑌯 𑌮𑌹𑍌𑌜𑌸𑌮𑍍 । 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌥𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑌂𑌕𑌾𑌶𑌮𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌮𑍃𑌷𑌿𑌸𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥ ௧௬ ॥ 𑌤𑌤𑌸𑍍𑌤𑍇𑌨𑌾𑌭𑍍𑌯𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇𑌨 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥ 𑌤𑌾𑌮𑍍𑌰𑌪𑌰𑍍𑌣𑍀𑌂 𑌗𑍍𑌰𑌾𑌹𑌜𑍁𑌷𑍍𑌟𑌾𑌂 𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌥 𑌮𑌹𑌾𑌨𑌦𑍀𑌮𑍍 ॥ ௧௭ ॥”

இவற்றுள் தமிழரசர்களாகிய சேர சோழ பாண்டியர்களையும், தமிழிலக்கணம் வகுத்த அகத்திய மாமுனிவர் பொதிகையிலிருப் பதையும் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. அதற்கு எவ்வளவு காலத்திற்கு முன்னர் முனிவர் மலயத்துக்கு வந்தனர் என்பது அறியக்கூடவில்லை.

இனி, தமிழாசிரியர் பலர் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன என்பர். முதற்சங்கம் 4440 யாண்டும், இடைச்சங்கம் 3700 யாண் டும், கடைச்சங்கம் 1850 யாண்டும் நடைபெற்றன என்பது அவர் கொள்கை. சங்கம் இறுதிபெற்றதைச் சரித்திர ஆராய்ச்சிக்காரர் இற்றைக்குச் சுமார் 1700 யாண்டுகளுக்குமுன் என்பர். சங்கங் களுக்கிடையிட்ட யாண்டு இத்துணை என்பது அறியக்கூடவில்லை. இவர் கொள்கைப்படி தமிழ்ச்சங்கம் தொடங்கியது இற்றைக்கு 12000 யாண்டுகளுக்கு முன்னர் என்பது தவறாகாது.

கி. பி. பல்லாயிரம் யாண்டுகளுக்கு முன்னமே அரேபியரும் மேல்நாட்டிலுள்ள பிறஜாதியாரும் தமிழ் நாட்டாரோடு வாணிகம் புரிந்து வந்தனரென்பது சரித்திர ஆராய்ச்சியாற் போந்த உண்மை. அந்நாடுகளில் அரிசி, மயிற்றோகை முதலிய பல பண்டங்களுக்கு இன்னும் தமிழ்ப்பெயரே வழங்கி வருகின்றன. பல்லாயிரம் யாண்டு களுக்கு முன்னிருந்த எகிப்தியர் இறந்தவர் உடலைக் கெடாது பாடம் செய்து வைப்பது வழக்கம். அவ்வுடல்களின்மீது அக்

காலத்து அணிந்த உயர்ந்த ஆடைகள் இந்நாட்டில் நெய்யப்பட்டன. பிறநாட்டார் இந்நாட்டிற்கு வந்ததுபோலத் தமிழர்களும் நாவாய்களிற் பிறநாடுகளுக்குப் போகும் வழக்கம் உண்டு. சங்கச்செய்யுட்களிற் "பெருநீரோச்சுநர்" என்று சொல்லியிருப்பது தமிழர் பெருங்கடலைக் கடந்து செல்லும் வழக்குடையர் என்பதைக் காட்டும். மேற்சொல்லியவற்றால் ஆங்கிலம், பிரஞ்சு, ஜர்மன் முதலிய பிறநாட்டு மொழிகளையும், இந்தியநாட்டுப் பிறமொழிகளையும் விடத் தமிழ் தொன்மையிற் பின்னிட்டதன்றென்பது விளங்கும்.

சங்கந்தோன்றிய பின்னர் முத்தமிழிலும் இயற்றப்பட்ட நூலும் செய்யுளும் எண்ணிறந்தன. அவற்றில் ஒரு பகுதிக்கு இக்காலத்திற் பெயர்மட்டுமே உள. சங்கத்திறுதிக்காலத்திற்கு முன்னே தோன்றியன சில உள. அவை சில பேரறிவாளர்களுடைய நன்முயற்சியால் யாவரும் அடையக் கூடியனவாக இருக்கின்றன. சங்கநூல்களின் பெருமையை இப் புத்தகத்தைப் படிப்போர் ஒரு சிறிதே அறியலாம். முற்றும எளிதில் உணரும்படி செய்வதைச் சான்றோர் சிலர் மேற்கொள்ளவேண்டும்.

இதுவரையிற் சங்கத்திறுதிக் காலத்திற்கு முற்பட்டசெய்தி கூறப்பட்டது. சங்கத்திறுதிக் காலத்திற்குப் பின்னரும் தமிழ்மொழியில் இயற்றப்பட்ட நூல்களுக்கும் செய்யுள்களுக்கும் அளவில்லை. அவற்றுள்ளும் பல இறந்தன. எனினும், இப்பொழுது எஞ்சியிருப்பனவற்றைக்கொண்டும் தமிழ் தொன்மையினும், சொல்வளத்தினும், இலக்கண வரம்புடைமையினும், செய்யுள் வகையினும், நாகரிகத்தினும் பிற எம்மொழிக்கும் பின்னிடாத உயர்ந்த நிலைமையிலிருக்கிறது என்று கூறுவது மிகையாகாது. இது பற்றிச் சில ஆங்கில கனவான்கள் கூறியிருப்பன வருமாறு:—

Rev. Dr. Winslow: "In the 6th or 7th century before Christ, at the head of a similar colony, we find the celebrated Agastya, called the father of Tamil. He is said to have learned it from Skanda, the second

son of Siva. We are not to suppose that he formed the Tamil alphabet. The words எழுத்து, (letter,) and சுவடி, (book,) are original Tamil, and shew that such existed before there were any innovations from Sanskrit, which Agastya himself commenced. He formed the first Tamil grammar. It contained 12000 sutras. All is now lost except some fragments preserved by Tholkappiyar in a grammar which bears his own name. Agastya wrote voluminously both in Tamil and Sanskrit."

In another place he writes: "It is said that the language of the mountaineers of Raja mahal abounds in terms identified with Tamil and Telugu. What is more singular, the names by which the ivory, apes, peacocks, conveyed by Solomon's ships of Tarshish were known, are the same with those still used in Tamil; seeming to imply that the traders visited Ceylon or India, and obtained with these novelties their Tamil names Danta, Kapi, and Togai as found in the Hebrew Bible."

"Tamil is not a vulgar dialect. Before the principal basis of English had a written character, it was a highly polished language. Its name signifies *sweetness*, and though not so musical as Telugu in its poetic form especially, it is not without its claim to euphonic charms and "linked sweetness."

"Unlike several of the Vernaculars of India, it is not, as some have supposed, a daughter of Sanskrit.

Its Alphabet differs not only in character but in sound, and is more limited. Its Grammar, though conformed to Sanskrit, as far as the genius of the language would allow, is still very different. It has no article, no relative pronoun, no dual number, no optative mood. It differs in its numerals, in many nouns, verbs, and adverbs and in technical terms in grammar. In the declension of its nouns, the conjugation of its verbs and the arrangement of its sentences, it more resembles Latin."

Yet in another place he writes: "It is not perhaps extravagant to say that in its poetic form, Tamil is more polished and exact than Greek and in both dialects, with its borrowed treasures more copious than Latin. In its fulness and power it more resembles English and German than any other living language."

Mr. Taylor: "It is one of the most copious, refined and polished languages spoken by man."

Doctor Caldwell: "Tamil, the most cultivated, *ab-intra*, of all the Dravidian idioms can dispense with Sanskrit altogether, if need be, and not only stand alone but flourish without its aid."

Rev Dr. G. U. Pope: "But, although the very ancient copious and refined Tamil language is inferior to none, it is regarded by most people as the (probably barbarous) vernacular of a people living somewhere in a remote district of Great Britain's imperial possessions. Neither does our Indian Govt. nor do our

universities fully recognise the value of Tamil literature; and so those who spend their lives in the study of the great south Indian classics must resemble men seeking for pearls under water."

Mr. J. M. Nallaswami Pillai about Dr. Pope: "He loved Tamil literature with all his heart and he rated it very highly and wanted to be inscribed in his tombstone as a student of Tamil. He spoke of the kural as unparalleled in literature of any country or nation."

இங்கு, இதன் சம்பந்தமான முற்கால நிலைமையையும், தற்கால நிலைமையையும் தொகுத்துக் கூறுவது பொருத்தமானது. அது, "முற்காலத்துத் தமிழ்நாடு தமிழரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அவ்வரசர்களும், நூற்றுக்கணக்கான வள்ளல்களும், பிற தமிழ்மக்களும் தமிழ்ப்புலவர்களைப் பேரன்போடும் ஆதரித்து வந்தார்கள். அதனால் தமிழ்மொழி அங்ஙனம் வளர்தற்கேதுவாயிற்று. இக்காலத்து ஆட்சியோ ஆங்கிலேயரது. அரசாங்க நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன. சட்டசபை, நியாயஸ்தலங்கள் இவற்றிற் பேசப்படுவதும் ஆங்கிலமே. சட்டமெல்லாம் ஆங்கிலம். ஹிந்து தர்ம சாஸ்திரங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரமாணமாய்க் காட்டப்படுகின்றன. தமிழர் ஒருவரை ஒருவர் சந்திக்கும் காலத்தில் ஆங்கிலத்திற்பேசுவதும், ஒருவருக்கொருவர் ஆங்கிலத்தில் எழுதிக் கொள்வதும் சாதாரணமாயிருக்கிறது. ஆங்கிலம் கற்பிக்குங் கல்லூரிகளோ இந்நாட்டில் பல உள்ளன. அங்கு சமஸ்கிருதம், லத்தீன், கிரீக் முதலிய இறந்துபட்ட மொழிகளுக்குக்காட்டும் சலுகையைத் தமிழ்நாட்டில் தமிழ்மொழிக்குக் காட்டாது அதனைத் தாழ்த்திவருகின்றனர். ஆங்கிலம் கற்பிக்கும் கணக்காயருக்கு மாதம் 1000 ரூபாய்க்கு மேலும் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. தமிழ்க் கணக்காயருக்கோ அத் தொகையில் பத்திலொருபங்குக்குக் குறைந்தும் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது,

இதுவரையிற் கூறியவற்றால் தமிழ்மொழி தொன்று தொட்டு மிகமேலான நிலைமையில் இருந்து வந்திருக்கிறது என்பதும், தங்களது அரிய பெரிய சொத்தாகிய தமிழைத் தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தமது முதற்கடமையாகப் போற்றிவரவேண்டும் என்பதும், பெற்ற அன்னையினும் அன்பிற்குரிய அருமைத் தாய்மொழியாம் தமிழைப் போற்றுதவன் தமிழன் ஆகான் என்பதும் நன்குவிளங்கும். சில நூற்றுண்டுகளுக்கு முன்னர்ப் பிறந்து இந்நாட்டில் வந்துலவும் ஆங்கிலமாகிய பிறமொழியைப் புகழ்ந்து தமது தாய் மொழியினிடத்து அன்பு பாராட்டாதவர் பலர் இன்னும் நம் நாட்டில் இருக்கின்றனர் என்பதை விசனத்துடன் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை." என்பது.

தமிழின் பண்டை நிலைமையும், பிற்காலத்திய தோன்றல்-திரிதல்-கெடுதல்களும்:— தமிழ்ச்சங்கத்தைப் பற்றியும், அது போற்றப்பட்டு வந்ததைப் பற்றியும் ஒருவாறு தொகுத்துரைக்கப்பட்டது. இனி, அக்காலத்துப் புலவர்களுடைய ஊர்களை ஆராயின் பரந்த தமிழ் நாட்டில் தமிழ் ஓங்கிவளராத இடமில்லை என்பது விளங்கும். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் இலக்கண இலக்கியங்கள் பல இயற்றப்பட்டன. இயற்றமிழ் என்பது யாவரும் அறிந்தது. இசைத்தமிழ் என்பது இயற்றமிழோடு பண்ணுந்திறனும் கூடியதாம். நாடகத் தமிழ் என்பது இசைத்தமிழோடு அபிநயமும் ஆட்டமும் கூடியதாம். பேராசிரியர் மரபியலில் "ஒத்த காட்சி" என்னும் சூத்திர உரையில் எழுதியிருப்பது இதனை விளக்கும். அது "வழக்கியலும், வழக்கியலாற் செய்யப்பட்ட செய்யுளியலும் பற்றி எழுந்த இலக்கணம் இயற்றமிழெனப்படும். அச்செய்யுளின்றி அமையாத இசையிலக்கணம் இசைத்தமிழெனப் பெயரெய்தி அவ்வியற்றமிழ்ப் பின்னர் வைக்கப்பட்டதெனப்படும். இவ்விரண்டின் வழிநிகழ்த்துங் கூத்திலக்கணங் கூறிய நாடகத்தமிழ் அவற்றுப் பின்னர்த்தாமென முறைமை கூறுதலும்" என்பது. இக்காலத்துத் தமிழிசையும் தமிழ்க் கூத்தும் அரிதாயின. பிறநாட்டிசையும் பிறநாட்டுக் கூத்துமே பெரும்பாலும் வழங்குகின்றன. தமிழிசை தமிழ்க்கூத்து என்றவற்றின் இலக்கணமாக முற்காலத்திருந்

தவற்றுட் சிலவற்றின் பெயரை ஈண்டுக் குறிக்கின்றேன். அவை பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், பூதபுராணம், களரியா விரை, முறுவல், ஜயந்தம், குணநூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், சச்சபுட வெண்பா, தாளசமுத்திரம், சுத்தான ந்தப் பிரகாசம், பதினாறு படலம், கூத்தநூல், தாளவகையோத்து, நாடகவியல், சொல்லகத்தியம், ஆசிரியமாலை, இசைநுணுக்கம் முத லிய. இவற்றுள் மிகச் சிலவே இப்பொழுது உள்ளன. ஏனைய இருந்தன என்பது அவ்வவற்றிற் சிற்சில சூத்திரங்களை உரையா சிரியர்கள் மேற்கோளாக வரைவதனாலும், பெயர் கேட்கப்படுகின் றமையாலும் அறியக் கிடக்கின்றது. பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்னும் பண்களையாவது; அந்தாளி, மருள், குச்சரி, குறண்டி, சாதாரி முதலிய திறன்களையாவது இன்னவென்று அறி ந்து பாடுவோர் இக்காலத்து எத்துணையர் உளர்? பண் என்பது பண், பண்ணியம் என இரண்டாகவும், திறன் என்பது திறன், திறத்திறன் என இரண்டாகவும் பகுக்கப்பட்டிருந்தன. அவை யெல்லாம் இப்பொழுது ராகம் என்னும் பெயரைப் பெற்றுள்ளன. செம்பாலைப்பண் என்று முன்னோர் கூறியது இக்காலத்துச் சங்க ராபரண ராகம் என்னும் பெயரோடு வழங்குகின்றது. சாதாரி என்று அக்காலத்திற் சொல்லப்பட்டது இக்காலத்து நீலாம்பரி என்று வழங்குகின்றது. இவ்வாறு பழைய பண்ணும் திறனும் தம் பெயரை இழந்துவிட்டன. ஏழிசையின் பெயர்களாகிய குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்றிருந்தன மாறி சட்ஜம் முதல் நிஷாதம் வரையிலுள்ள சமஸ்கிருதப் பெயர் களைப்பெற்று ச, ரி, க, ம, ப, த, நி என்று வழங்குகின்றன. நிற்க. சாக்கைக்கூத்து, ஆரியக்கூத்து என்றால் அறிவார் எத்துணைப் பேர் உளர்? ஆங்கில டிராமா முதலியன வந்து நாடெங்கும் பரவி விட்டன. சதிர் என்று நடைபெற்றதும் தொலைந்து கொண்டு வருகிறது. இசை, நாடகம் இவற்றின் இலக்கணங்களைக் கூறும் தமிழ் நூல்களைக் கற்பாரைக் காண்கிலேம். சில சமஸ்கிருத நூல் கள் கற்கப்பட்டு வருகின்றன. இசை, நாடகம் என்றவற்றின் கதி தமிழ் நாட்டில் இவ்வாறுள்ளது!

இனி, இயற்றமிழை யாராய்வாம். அகத்தியம் இயற்றப் பெறு தற்கு முன்னர்த் தமிழில் இலக்கண நூல்கள் இருந்தன என்று சிலரும், இல்லை என்று சிலரும் சொல்லுகின்றனர். இருந்தன என்று கொள்ளினும் அகத்தியம் வெளிவந்த பின்னர் அவை ஒளி த்தன என்பது ஒரு சிறிதும் தவறாகாது. முனிவர் அகத்தியத்தை இயற்றிய பின்னர்த் தமிழ்மொழி முற்றிலும் இலக்கண வரம் புடைய தென்னும் பெருமையைப் பெற்றது. திரணதூமாக்கினி என்னும் இயற்பெயரினையுடைய தொல்காப்பியன், அதங்கோட்டா சான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியன், நற்றத் தன், வாமனன் எனப் பன்னிருமாணுக்கர் அவரிடம் தமிழ் கற்ற னர் என்பர். இவர்கள் ஒவ்வொருவரும், சிலர் முத்தமிழுக்கும், சிலர் ஒன்று அல்லது இரண்டு தமிழுக்கும் தனித்தனியே இலக் கணமியற்றியதன்றி அனைவரும் சேர்ந்து பன்னிருபடலம் என் ரோர் இலக்கண நூலும் இயற்றினர். தொல்காப்பியம் தவிர மற் றவை இறந்து பட்டன. அவை இருந்தன என்று காட்ட உரை யாசிரியர்கள் மேற்கோளாகக் காட்டிய சிற்சில சூத்திரங்கள் இருக் கின்றன. பன்னிருபடலம் முழுவதும் புறப்பொருள் வெண்பா மாலை இயற்றிய ஐயனாரிதனார் காலம்வரை இருந்ததென்பது அந் நூற் சிறப்புப் பாயிரத்தாலறியக் கிடக்கின்றது. அது,

'மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்."

என்பது.

முனிவர் பல மாணவர்களுக்குத் தமிழைக் கற்பித்தும், தமி ழ்ச் சங்கம் அமைத்தும், அகத்தியம் இயற்றியும், வேறு பலவாற்றா னும் தமிழ் தழைத்தோங்கிப் பரவும்படி செய்தனர் என்பதைக் காஞ்சிப் புராணமுடையார் "ஆசிலாத் தமிழ்பரப்பி அருந்தமிழ்க் குரவு பூண்ட தேசினன்" என முனிவரைச் சிறப்பிக்குமிடத்துச்

சுருங்கக் கூறினர். ஆயிரக்கணக்கில் இருந்த சங்கப்புலவர்கள் நூல்களும் செய்யுட்களுமாக எண்ணிறந்தன இயற்றினர். சங்கத்தின் கடைக்காலத்தில் இயற்றப்பட்ட செய்யுட்களில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, மணிமேகலை, சிலப்பதிகாரம் ஒழிய மற்றவை கிடைக்கப் பெற்றிலேம். [சங்கத் திறுதிக்காலத்துக்குப் பின்னரும் பல நூல்களும் செய்யுள்களும் இயற்றப்பட்டுள்ளன என்பதும் பிறவும் முன்னர்க் கூறப்பட்டன. இறந்துபட்டன போக உள்ளனவற்றிலும் பல வெளியிடாது அடக்கப்பட்டுள்ளன. முன்னோர் செய்த நூல்களைப் பலரும் அறியப் பரவச் செய்வதனால் விளையும் நன்மையின் அளவை நமது நாட்டவர் ஒருசிறிதும் அறிந்தாரில்லை.

தமிழில் இக்காலத்துள்ள இலக்கண நூல்களில் பண்டை ஆசிரியரால் இயற்றப்பெற்றதும், புலவர்களால் மேன்மையுடைத்தெனப் பாராட்டப்படுவதும் தொல்காப்பியமே. அதில் இயற்றமிழ் இலக்கணம் மட்டுமே அடங்கியுள்ளது. சிறந்த தமிழ்ப் புலவர்களில் இதைக் கற்றறியாதார் இல்லை. சில தமிழ்ப்புலவர் இக்காலத்துள்ள தொல்காப்பியமொழிந்த பிறஇலக்கணநூல்களைப் பிரமாணமுடையன அல்ல எனக் கூறுவர். தொல்காப்பியர் இயற்றமிழிலக்கணத்தை எழுத்து, சொல், பொருள் என மூன்றதிகாரங்களாகப் பிரித்தனர். எழுத்தாற் பெறப்படுவது சொல்; சொல்லாற் பெறப்படுவது பொருள். எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றில் அடங்காத ஒன்று உலகத்திலில்லை. உருவப்பொருள், அருவப்பொருள், அருவுருவப்பொருள் எல்லாம் சொற்பொருள் என்பதில் அடங்கும். சொற்பொருள் என்பதை வடமொழியில் பதார்த்தம் (பத+அர்த்தம்) என்பர். பதார்த்தம் என்னும் சொல்லில் அடங்காத பொருளுமுண்டோ? எழுத்து, சொல், பொருள் எனப் பகுத்து இலக்கணம் சொன்னபிறகு, அதில் அடங்காததும், வேறுசொல்லக்கூடியதுமாகிய ஓர் இலக்கணம் இருக்கிறது என்று சொல்வது எவ்வகையினும் பொருந்தாததேயாம். இசையிலக்கணம், கூத்திலக்கணம் என்றவையும் ஒருவகையில் இவற்றுள் அடங்கும். தொல்காப்பியர் தமது நூலை

எழுத்து, சொல், பொருள் என மூன்றதிகாரங்களாகப் பிரித்ததன் கருத்து ஒருவாறு இதனால் விளங்கும். பிற்காலத்தார் யாதுபற்றியோ இலக்கணத்தை ஐந்து பகுப்பாக்கி ஐந்திலக்கணமுடையது தமிழ் என்றனர்.

இனி, இவர் கூறும் ஐந்தில் ஒன்றாகிய அணியிலக்கணம் தொல்காப்பியனார்க்கு உடன்பாடன்றென்பது சில உரையாசிரியர்களின் கொள்கை. அணியிலக்கணம் உண்டென்பார் பொருளதிகாரத்துள்ள உவமவியலை மேற்கோளாகக் காட்டுகின்றனர். உவமவியல் பொருளைப் புலப்படுத்துவதற்கு எழுந்ததே யன்றி அணியை உணர்த்துதற்கு எழுந்ததன்று என்பது பேராசிரியரது கருத்து. அது, "நிரனிறுத்தமைத்த" என்ற உவமவியற் சூத்திர உரையில் "இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையுஞ் சொல்லதிகாரத்தினுள்ளுஞ் செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்றன சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாருமுளர். அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணியென்று இலக்கணங் கூறப்படா. என்னை? வல்லார் செய்யின் அணியாகியும் அல்லார் செய்யின் அணியன்றாகியும் வரும், தாங்காட்டிய இலக்கணத்திற் சிதையாவழியுமென்பது. என்னை? 'நாயகர்க்கு நாய்கள்போ னட்பிற் பிறழாது-கூஉய்க் குழாஅமுடன் கொட்கு—மாய்படை—பன்றி யனையர் பகைவேந்த ராங்கவர்—சென்றெவன் செய்வர் செரு.' என்ற வழி, நாய்போலும் நட்புடையர் படையாளரென்பது வினையுவமம்; பன்றியனையர் பகைவேந்தரென்பது நாய்க்குப்பகையாகிய பன்றிபோலவென்பது. வேற்றுவேந்தர் பகைவராதலால் அவ்வுவமை விலக்கரிது. அன்றாமாயினும் அஃதணி யெனப்படாது; உவமைதான் உயர்ந்த தின்மையின்."......... ........"அல்லதூஉம் பொருளதிகாரத்துட் பொருட் பகுதிகளெல்லாஞ் செய்யுட்கு அணியாகலான் அவை பாடலுட் பயின்றவையெனப்பட்டன. என்றதனான் அவையெல்லாந் தொகுத்து அணியெனக் கூறாது வேறுசிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயமில்கூற்றாமென்பது" என்றும், வேறோரிடத்தில் "இனி, அவற்றைப் பொருளுறுப்பென்பதல்லது

அணியென்பவாயிற் சாத்தனையுஞ் சாத்தனாலணியப்பட்ட முடியுந் தொடையும முதலாயவற்றையும் வேறுகண்டாற்போல அவ்வணி யுஞ் செய்யுளின் வேறாகல் வேண்டும் என்பது." என்றும், "சிதை வெனப் படுபவை" என்ற மரபியற் சூத்திர உரையில் "செய்யுட் குரிய பொருட்படையெல்லாவற்றுள்ளும் நல்லனவுந் தீயனவும் இவையென்று சொல்லப்புகுந்தான் அவற்றுட் சிலசொல்லியொழி தலும், வழக்கொடு மெய்ப்பொருளும் ஆராய்வலென்று புகுந்தான் அவற்றுள் வழக்கிற்கு வேண்டுவ கூறி மெய்ப்பொருளாராய்ச்சி முழுவதூஉஞ் செல்லாது நெகிழ்ந்துபோதலும், எடுத்துக்கொண்ட நூலுட் காட்டும் இலக்கியங்களைச் சூத்திரத்தான் அடிவரை செய் வனென்று புகுந்து சில மறுத்துச்செய்து சிலவற்றிற்குச் செய்யாது போதல் போல்வனவுங் குன்றக்கூறலாம்." என்றும் கூறியவாற் றால் அறியலாகும். இவற்றை உற்று நோக்குழி அணியிலக்கணம் என்பதற்குப் பேராசிரியர் இரண்டு குறை கூறுவதை அறியலாம். ஒன்று அணி என்னும் பெயருக்குள்ள குறை. அலங்காரம் எனி னும் அக்குறை உள்ளதேயாம். சாத்தனும் சாத்தனால் அணியப் படும் ஆடை ஆபரண முதலியனவும், களபகஸ்தூரி முதலியனவும் வெவ்வேறும். ஆடையாபரண முதலிய அணியப்படும் பொருள் களே அணி அல்லது அலங்காரமென்று சொல்லப்படுபவை. சாத்த னது அல்லது சாத்தனதோ ருறுப்பினது இயற்கை அழகை அணி அல்லது அலங்காரம் எனக் கூறுவாரில்லை. சொல்லணி, பொரு ளணி என்ற இரண்டுமோ பாடலுட் பயின்றவை. பாடல் என்று ளது அன்று தொட்டே அவை அதனினின்றும் வேறு பிரிக்கப்ப டாதுள்ளன. ஆதலால் அணி என்னும் பெயர் பொருந்தாது. மற் றொன்று பாடலுட்பயின்ற பொருள்களை யெல்லாம் ஒருங்கு திரட் டிக் கூறாது சிலவற்றைக் கூறுவதாம். மேலும், செய்யுளில் உறுப்பு அமைவது அதை இயற்றும் புலவரது புத்தி விலாசத்தைப்பொறுத் ததாம். சிலர் புத்தியினும் வேறு சிலர் புத்தி மேலும் மேலும் விசாலித்துச் செல்லும். அவ்வாறு உண்டாகும் அகற்சிக்கு ஓர் எல்லை கற்பிக்க இயலாது. ஆதலால் இத்தனை வகைதான் அணி உண்டு என்று வரையறுப்பது பொருத்த முடையதன்று. சில

வற்றை மட்டும் தொகுத்து அவற்றிற்கு இலக்கணம் கூறுதல் குன்றக்கூறல் என்னும் குற்ற முடைத்தாம். இதற்குச் சான்றாக வடமொழியில் அலங்கார நூல் இயற்றிய தண்டியாசிரியர் முப்பத்தைந்து அலங்காரங்களுக்கு இலக்கணங் கூறினர். அவர்க்குப் பிற்காலத்தில் வங்க தேசத்தில் தோன்றிய ஜயதேவர் அலங்காரங்களை நூறாக அமைத்துச் சந்திராலோகம் எனப் பெயரிய ஓர் இலக்கண நூலைக் கூறினர். அதன் வியாக்கியானம் போலக் குவலயானந்தம் என்னும் நூலை இயற்றிய அப்பைய தீக்ஷிதர் சந்திராலோகத்திலுள்ளவற்றோடு இருபத்து நான்கு அலங்காரங்களைக் கூட்டி நூற்றிருபத்து நான்கு அலங்காரங்களுக்கு இலக்கண மெழுதினர். இதுவுமன்றி அலங்கார நூல் இயற்றுவோரில் ஒருவர் ஓர் அலங்காரத்துக்கு ஒரு பெயர் கொடுத்து ஒருவகையோடு சேர்த்தால் மற்றொருவர் அதற்கே வேறு பெயர் கொடுத்து வேறொரு வகையோடு சேர்ப்பர்.

தமிழில் வீரசோழிய முடையாரும், தமிழ்த்தண்டி என்பாரும் வடமொழித்தண்டி இயற்றிய காவியாதர்சம் என்னும் நூலை ஆதாரமாகக்கொண்டு அணியிலக்கணம் இயற்றினர். மற்றொருவரால் குவலயானந்தம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இலக்கண விளக்கத்திலுள்ள அணியிலக்கணம் ஒருவாறு தண்டியாசிரியரைத் தழுவியது. வடமொழிச் சந்திராலோகத்தைச் சேதுஸமஸ்தான வித்வான் ஸ்ரீமான் முத்துஸாமி ஐயங்கார் தமிழில் மொழி பெயர்த்தனர். அணியிலக்கணம் என்று தமிழில் ஒன்று உளது. அதை இயற்றியவருடைய பெயர், காலம் முதலியன விளங்கவில்லை. தொன்னூல், முத்துவீரியம் என்ற இவற்றிலும் அணியிலக்கணம் உளது. படிப்பாரைக் காணேம். மாறன் அலங்காரம் என்ற சிறந்த தமிழ் நூல் ஒன்று உளது. அது நம்மாழ்வார்மீது பாடப்பட்டது. அதில் அறுபத்து நான்கு அணிகள் சொல்லப்பட்டுள்ளன. நூல்தோறும் அணியின் தொகை, பெயர் முதலியன எல்லாம் வேறுபடுவது பேராசிரியர் கூற்றை வலியுறுத்தும்.

சிலர் தொல்காப்பியர், அப்பைய தீக்ஷிதர் முதலியோர் 'உவமை ஒன்றே அணியாவது; அணியென்று கூறப்பட்ட மற்

றவை யெல்லாம் அதனினின்றும் விரிந்தவை' என்ற கொள்கை யினை யுடையவர் எனக் கூறி அதற்குச் சான்றாக அப்பைய தீக்ஷி தர் வடமொழியிலியற்றிய சித்திரமீமாம்சை என்னும் நூலினுள்ள ஒரு சுலோகத்தைத் தமிழ்ப் பாவாக்கிக் காட்டுவர். அது "உவமை யென்னும் ஒரு பெருங் கூத்தி-பலவகைக் கோலம் பாங் குறப் புனைந்து-காப்பிய வரங்கிற் கவினுறத் தோன்றி-யாப்பறி புலவ ரிதயம்-நீப்பறு மகிழ்ச்சி பூப்பநடிக் கும்மே" என்பது. அப்பைய தீக்ஷிதர் உவமை என்னும் அலங்காரம் இன்னின்ன அலங்காரங்களாய் விரியும் எனக்கூறி மற்றை அலங்காரங்களையுஞ் சொல்லிக் கிரந்தத்தைப் பூர்த்திபண்ணு முன்னர் யாது காரணத் தாலோ கிரந்தம் முடிவடையாமல் நின்றுவிட்டதென்பதைச் சித் திர மீமாம்சையை நன்றாய்க் கவனிப்பதனாலும், குவலயானந்தத் தில் அவர் சொல்லியிருப்பவற்றாலும் அறியலாம். தொல்காப்பியர் உவமையை அணியாகக் கொள்ளவில்லை என்பது கீழ்வருவனவற் றால் அறியலாகும். அவை, பேராசிரியர் "வினைபயன் மெய்யுரு" என்ற உவமவியல் முதற் சூத்திர உரையில் "மற்றிது மேல் எவ் வோத்தினோடு இயைபுடைத்தோ வெனின், மேற் பொருள் புலப் பாடு கூறிய மெய்ப்பாட்டியலோடு இயைபுடைத்து; என்னை? உவ மத்தானும் பொருள் புலப்பாடே கூறுகின்றா னாகலின். எங்ஙன மோ வெனின், ஆபோலும் ஆமா என்றக்கால் ஆமா கண்டறியா தான் காட்டுட் சென்றவழி அதனைக் கண்டால் ஆபோலும் என் னும் உவமையேபற்றி ஆமா இதுவென்று அறியுமாகலானென் பது" என்றும், "பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன்" என்ற அவ்வியற்பிறிதொரு சூத்திரவுரையில் "உவமையும் மெய்ப் பாடும் பொருள்களை அறிவிப்பனவாகி அவை வேறு வேறு பொருள் அறிவித்தலின் ஒத்து வேறுடையன வாயினுஞ் சிறு பான்மை மயங்கியும் வருமென்றற்கு இது கூறவேண்டிய தென் பது" என்றும், அவ்வியல் "உவமைப் பொருளை உணருங் காலை" என்ற சூத்திரவுரையில் "மேல் உவமப் பொருளானே உற்றதுண ரச் செயல் வேண்டுமென்றான்" என்றும் கூறுவன. இவற்றால் தொல்காப்பிய உவமவியல் அணியிலக்கணம் கூறப்புகுந்ததல்ல வென்பதும், பொருள் புலப்பாடு பற்றியே எழுந்ததென்பதும்

இனிது விளங்கும். தார்க்கிகர் பொருள் நிச்சயம் செய்வதற்கு உவமையை ஒரு பிரமாணமெனக் கொண்டதுபோலத் தொல்காப்பியர் பொருளை விளக்குவதற்கு உவமையை ஒரு கருவியாகக் கொண்டனர் போலும்!

சொல்லணி, பொருளணி என இருபகுதியதாகும் அணியிலக்கணம். சொல்லணிக்கு மிறைக்கவி, சித்திரகவி என்ற வேறு பெயர்களும் உண்டு. கோமூத்திரி, மாலைமாற்று, நாகபந்தம் முதலிய பலவும் இதில் அடங்கும். சொல்லணியினது தொகையும், பெயரும் ஆசிரியரைப்பற்றி வேறுபடும். அவருள் சொல்லணியின் தொகை இருபது என்பர் சிலர்; முப்பத்து நான்கென்பர் சிலர். யாப்பருங்கலமுடையார் மிறைக்கவியை யாப்பிலக்கணத்தின் பகுதியதாக்கினர். தமிழ்த்தண்டியாசியர் செய்யுள்வகைகளை அணியிலக்கணத்தின் பகுதி யாக்கினர். நச்சினார்க்கினியர் "ஒற்றொடு புணர்ந்த" என்ற செய்யுளியற் சூத்திரவுரையில் "இனி யாப்பருங்கல முதலியவற்றிற் கூறிய சித்திரகவியினையும் ஈண்டுச்சேரக் கூறுக வெனின் யந்திரமு மந்திரமுமாய்த் தெய்வத்திற்கே யுரியவாகக் கூறும் மிறைக்கவி இம்முப்பத்துநான் குறுப்பும்போல வகைந்திற்குரிய சான்றோர் செய்யுட் குறுப்பாய் வாராவென்றும் அத்திணைக்குரிய மரபு வழுவிற்றென்றுங் கருதித் தொல்காப்பியனார் கூறாமையானும், அவற்றதிலக்கணங்கூறிய ஆசிரியரும் அவற்றிற்கு இலக்கியஞ் சான்றோர் செய்யுட்களுட் காணாமையின் 'வடவெழுத்தொரீஇய எழுத்தொடு புணர்ந்தசொல்லானன்றி வடவெழுத்தாற் பெரும்பான்மை வரச் செய்யுள் தாமே செய்து இலக்கியமாகக் காட்டினாராதலானும் யாமும் இம்மிறைக்கவி யிலக்கணம் ஈண்டுக் கூறாமாயினும்." எனச் சித்திரகவியைப்பற்றிக் கூறினர். திவாகரம், பிங்கலம், சூடாமணி நிகண்டு ஆதியவற்றுள் அணிகளின் பெயரும், தொகையும் மாறுபடுவதைக் காணலாம். ஊர், பெயர், காலம் முதலிய ஒன்றும் தெரியாத அணியிலக்கணம் ஒன்று தவிர வீர சோழியத்திற்கு முன்னர் அணியிலக்கண நூல் தமிழில் இருந்ததாகத் தெரியவில்லை. தமிழிலுள்ள மற்றைய இலக்கண நூல்களெல்லாம் அதற்குப் பின்னர்த் தோன்றியவையே.

தொல்காப்பியர் கி.மு. மூன்றும் நூற்றுண்டுக்கு முன் இருந்தவர் என்றுகொள்ளத் தகுந்த காரணங்கள் உள. அதை மறுத்துக் கூறுவோரும் சிலருளர். பாணினிமுனிவர் வடமொழியில் இயற்றிய வியாகரண சூத்திரத்துக்குப் பாஷியம் எழுதிய பதஞ்சலி முனிவர் கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் இருந்தனர் என்பது சரித்திரம் வல்லார் கூற்று. தொல்காப்பிய முனிவர் பதஞ்சலி முனிவருக்கு வெகுகாலம் முன்பிருந்தவர். முதலில் அலங்காரசாஸ்திரம் வடமொழியில் வாமனராற்செய்யப்பட்டது. அவர் பதஞ்சலிமுனிவருக்குக் காலத்தாற் பிற்பட்டவர் என்பது பிரசித்தம். ஆதலால் தொல்காப்பியம் இயற்றப்பட்ட காலத்து வடமொழி தென்மொழி என்ற இரு மொழியிலும் அலங்கார நூல் இருந்ததில்லை என்பது தவறுகாது. வாமனருக்குப் பின்னர் வடமொழியில் அலங்காரசாஸ்திரம் செய்தவர் மம்மடபட்டர். தண்டி காவியாதர்ச மியற்றியது அதற்கும் பிற்காலத்தே. இம்முறையை மாற்றிக் கூறுவோருமுளர். அவரும் இம்மூவரும் பதஞ்சலிக்குப் பிந்தியவர் என்பதை மறுப்பதில்லை. இவற்றைக் கூர்ந்து நோக்குவார்க்குத் தொல்காப்பியர் உவமவியலை எந்த நோக்கத்துடன் இயற்றியருளினுர் என்பது இனிது விளங்கும்.

செய்யுளுறுப்பு:—இனி யாப்பிலக்கணம் எனப்படுவதை ஆராய்வாம். தொல்காப்பியரியற்றிய செய்யுளியலுக்குப் பிரதியாய் இக்காலத்துப் பெரும்பாலும் கற்கப்படுவது அமிதசாகரர் இயற்றிய யாப்பருங்கலக்காரிகையே. தொல்காப்பியர் வனப்பினையும், இருபத்தாறு உறுப்புக்களையும் செய்யுளியல் முதற் சூத்திரத்திற் கூறுகின்றனர். "யாப்பியல் வகையின்—ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்" என்ற சூத்திரத்திற் சொல்லியிருப்பது அதைக் காட்டும். யாப்பருங்கலக் காரிகையுடையார் வனப்பொடு செய்யுளுக்குப் பதினேருறுப்புக் கொண்டனர்.

"எழுத்துப் பதின்மூன் றிரண்டசை சீர்முப்ப தேழ்தளையைந்
திழுக்கி லடிதொடை நாற்பதின் மூன்றைந் தூபாவினமூன்
றொழுக்கிய வண்ணங்கள் நூறெுன்ப தொண்பொருள் கோளிருமூ
வழுக்கில் விகாரம் வனப்பெட்டி யாப்புள் வகுத்தனவே."
(யாப்பருங்கலக்காரிகை.)

இவற்றில், தொல்காப்பியர் உறுப்பு எனக் கொண்டவை ஏழு. தளை, பாவினம், பொருள்கோள், விகாரம் என்பன அவர் செய்யுளுறுப்பெனக் கொள்ளாதவை. "மாத்திரை யெழுத்திய லசைவகை யெனா" என்னும் செய்யுளியல் முதற்சூத்திரவுரையில் பேராசிரியர் தளையைப் பற்றிச் சொல்லுவதாவது—"மற்று யாத்தசீரேயடியாப்பென்றதென்னை? தளையென்பதோர் உறுப்புப் பிறர் வேண்டுபவாலெனின், இவருஞ் சீரது தொழிலே தளையெனவேண்டுப, தளைத்தலிற் றளையாதலானும் வேறு பொருளென வேண்டாரென்பது; என்றார்க்கு அசையின்றிச் சீருமில்லை; சீரின்றி அடியுமில்லையாம் பிறவெனின், அற்றன்று, உறுப்பும் உறுப்புடைச் செய்யுளும்போல அவை கொள்ளப்படும்; தளையென வேறொன்றின்மையான்......" என்பது. நச்சினார்க்கினியர் சொல்வது,—"இவ்வாசிரியர் தளையை உறுப்பாகக் கொள்ளாதது என்னையெனின்:—தளையாவது சீரினது தொழிலாய்ப் பாக்களின் ஓசையைத்தட்டு இருசீரிணைந்ததாகும்; அவ்வாறிணைந்த இருசீரினையும் ஆசிரியரெல்லாம் இருசீர்க்குறளடியென அடியாகவே வகுத்துக் கொண்டாராதலின், தளையென வேறோருறுப்பின்றாம். * * * *" என்பது. இனத்தைப் பற்றித் தனியே எழுதுவதால் ஈண்டு ஒன்றும் விவரிக்கவில்லை. தொல்காப்பியர் பொருளையும், பொருள்கோளையும் வெவ்வேறாகக் கொண்டு பொருள்கோளைச் சொல்லதிகாரத்தின் பாற்படுத்தினர். "நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று—அவை நான் கென்ப மொழிபுணரியல்பே." என்னும் எச்சவியல் எட்டாஞ் சூத்திரம் இதை விளக்கும். விகாரத்தை எழுத்ததிகாரத்தின் பாற்படுத்தினர். விகாரத்தைச் செய்யுளுறுப்பென்றல் பொருந்தாதென்பது அவர் கொள்கைபோலும்! யாப்பருங்கலக்காரிகை யுடையார் விகாரத்தோடு வகையுளி, வாழ்த்து, வசை, குறிப்பிசை முதலியவற்றையுங் கூட்டிக்கூறினர். வகையுளி என்பது சீரலகிடுவதில் ஒரு பேதம், அது சீரின்பாலடங்கும். வாழ்த்து, வசை, குறிப்பிசையென்பன தொல்காப்பியர் செய்யுளுறுப்பெனக்கொண்ட பொருளில் அடங்கும். வனப்பு என்று காரிகையுடையார் கூறுவது பாவின்பால் அடங்குமென்னலாம். இவைகளைத் தொல்காப்பியர் செய்யுளியலிற் சொல்லுகின்றனர். ஆயினும் உறுப்பெனக் கொள்ளவில்லை.

காரிகையுடையார் தொல்காப்பியரோடொப்ப உறுப்பெனக்கொண்டவைகளிலும் வேறுபாடு காணப்படும். உதாரணவாய்பாட்டால் நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்கசை கொண்டனர். பிற்காலத்தார் பலர் நேர், நிரை யென்னும் இரண்டசையே கொண்டனர்.

இனி, செய்யுளுறுப்பெனப்படும் பாவினத்தை ஆராய்வாம். செய்யுள் என்பது பாச்செய்யுள், உரைச்செய்யுள், நூற்செய்யுள் என மூவகைப்படும். தொல்காப்பியர் பாச்செய்யுள் என்றது அகவற்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா என்பனவாம்; தாழிசை, துறை, விருத்தம் என்னும் இனம் அதில் அடங்காது எனக் கொண்டனர். பேராசிரியர் "அவ்விய லல்லது பாட்டாங்குக் கிளவார்." (செய்-86) என்னுஞ் சூத்திரவுரையில் "அல்லதூஉம் மாணாக்கன் இதன் முதனூல் செய்த ஆசிரியன் பண்ணுந் திறனும் பகுத்தானைக்கண்டு இவற்றையும் பாவும் இனமுமாகப் பகுத்தான்கொல் என்று ஐயுறுமை விலக்கி இயல்நூலுள் அவ்வாறு கூறிற்றிலன் எனச் சொல்லினான்." என்றும் "அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே" (செய்-35) என்னுஞ் சூத்திரவுரையில் தலையிடை கடைச்சங்கத்தாரும், பிறசான்றோரும் நாற்சீரடியான்வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியுமே பெரும்பான்மையுஞ் செய்தார்; வஞ்சிப்பா சிறுவரவிற்றெனக் கொள்க." என்றும் எழுதியிருப்பது 'அகத்தியர் தொல்காப்பியர் இருவர்க்கும் இனம் உடன்பாடன்று' என்று கொள்வது அவரது கொள்கை என்பதைக் காட்டும். நச்சினார்க்கினியர் "இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்" (செய்-238) என்னும் சூத்திரவுரையில் "சிந்தாமணி முதலியன பாவிற்கினமாகிய துறையும் விருத்தமும் பற்றிச் செய்தனவென்பார்க்கு அப்புலவர் செய்யுட் செய்கின்ற காலத்திற்கு நூல் தொல்காப்பியமாயவாறும், அவர் இனம் கொள்ளாதவாறும், அவ்வினங்கள் தாம் இலக்கணக் குறைபாடுடையவாறும், கொச்சகம்போற் சிறப்பின்மையும் முன்னர்விளங்கக் கூறியவற்றைக்கொண்டும் பின்பு செய்தநூல்கள் முன்புசெய்த செய்யுட்கு விதியாகாத வாறுங் கொண்டு மறுக்க. பின்னோர் தாம்செய்த நூல்கட்கு அவை உதா

ரணமாகக் காட்டலின் அச்செய்யுள் அந்நூல்கட்கு முன்னுயவாறும் உணர்க. இனித் தொல்காப்பியனுரை யொழிந்த ஆசிரியர் பதினெருவருட் சிலர் இனமும் கொண்டார். அதுபற்றி யாப்பருங்கலம் முதலியவற்றினும் இனம் கொண்டார் என்பார்க்கு "அவர்கள் அகத்தியனுர்க்கு மாருக நூல்செய்தவராவர். அவை வழிநூலெனப் படாவென்று மறுக்க" என்றும், "அவ்வியல் பல்லது பாட்டாங்குக் கிளவார்" (செய்-86) என்னும் சூத்திரவுரையில் "ஆங்கு" என்றது அகத்தியனை. * * * "முதனூலாசிரியர் இசைக்குப் பண்ணுந் திறனும் பகுத்தாற்போல, இயற்குப் பாவும் இனமும் பகுத்தார்கொல் என்னும் ஐயம் நீக்குவதூஉ மாம். இவர் கருத்தால் சான்றோரும் இனம் கொள்ளாராயினுர்" என்றும், சீவகசிந்தாமணி "மூவா முதலா வுலகமொருமூன்றுமேத்த" என்னும் கடவுள் வாழ்த்துச் செய்யுள் உரையில் "இனி இத்தொடர்நிலைச்செய்யுளை இனமென்ப. அந்நூல்கள் இனமென்று காட்டிய உதாரணங்கள் தாம் அவர் சேர்த்த அவ்வப்பாக்கட்கே இனமாகாது ஒழிந்த பாக்கட்கும் இனமாதற்கு ஏற்றலானும், துறையை விருத்தமாகவும், தாழிசையை விருத்தமாகவும் ஓதுதற்கு அவை ஏற்றமையானும் 'மூவாமுதலா' என்னுங்கவி முதலியன தாழம்பட்ட ஓசையான் விருத்தமாயும், சீர்வரையறையானும் மிகத் துள்ளிய ஓசையானுந் துறையாகியும் கிடத்தலின் இதனை விருத்தக் கலித்துறையெனல் வேண்டும்; அது கூறவே துறையும் விருத்தமும் எனப் பகுத்தோதிய இலக்கணம் நிரம்பாதாமாகலானும் இனம் என்றல் பொருத்தமின்று. இச்செய்யுட்களின் ஓசை வேற்றுமையும் மிக்கும் குறைந்தும் வருவனவுங் கலிக்கே யேற்றலின் கொச்சகமென்றடங்கின." என்றும் எழுதியிருப்பது அவர்கொள்கையும் பேராசிரியர் கொள்கையோடொத்ததே என்பதைக்காட்டும். "தாவின் ருகித்தாழிசை பெற்றும்" (செய்-149) என்னும் சூத்திர வுரையிற் பேராசிரியர் நச்சினுர்க்கினியரிருவரும் இனம் கோடற்குரியதன்றென்று விரிவாய் எழுதியிருக்கின்றனர். இன்னும் பல இடங்களினும் எழுதியிருக்கிறுர்கள். அவர்கள் சொன்னதற்கு மாருய் உரையாசிரியர் எனப் பெயர்பெற்ற இளம்பூரணர் இனத்தை யொப்புக்கொண்டு தொல்காப்பியர் சூத்திரம் செய்திருப்பதாய்ச் சொல்வர். "பாட்டிடைக் கலந்த பொருள

வாகிப்-பாட்டி னியல பண்ணத்தி யியல்பே" (180) "அதுவே தானும் பிசியொடு மானும்" (181) "அடிநிமிர் கிளவி யீரா றாகும்" (182) என்னும் செய்யுளியற் சூத்திரங்களின் உரையில், பின்கண்டவாறு எழுதி யிருக்கின்றனர். அது "பண்ணத்தி பகுதிபடுமாறுணர்த்துதல் நுதலிற்று. பண்ணத்தி எனினும் பாவினம் எனினும் ஒக்கும். * * * * இதனாற் சொல்லியது இருசீரடிமுதலிய எல்லா அடிகளாலும் மூவடிச் சிறுமையாக ஏறிவரும் பாவினம் என்றவாறும். பன்னிரண்டாவன: ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலியெனச் சொல்லப்பட்ட நான்கு பாவினோடு தாழிசை, துறை, விருத்தமென்னும் மூன்றினத்தையு முறழப் பன்னிரண்டாம். அவற்றுள், தாழிசையாவது: ஆசிரியத் தாழிசை, வஞ்சித் தாழிசை, வெண்டாழிசை, கலித் தாழிசை என நான்காம். துறையாவது: ஆசிரியத்துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை என நான்காம். விருத்தமாவது ஆசிரியவிருத்தம், வஞ்சிவிருத்தம், வெளிவிருத்தம், கலிவிருத்தம் என நான்காம்" என்பது. இச்சூத்திரங்கட்கு நச்சினார்க்கினியர் உரை கிடைத்திலது. பேராசிரியர் இளம்பூரணர்க்கு முற்றும்மாறாய் எழுதுகின்றனர். பண்ணத்தி என்பதைப் பாவினம் என்று பொருள்படுமென்று அவர் கொள்ளவில்லை. காக்கைபாடினியார், அவிநயர் முதலிய சிலர் இனத்துக்கு இலக்கண நூல் அமைத்தனரேனும், அக்காலத்துச் சான்றோர் ஒருவரும் இனம் இயற்றியதாகத் தெரியவில்லை. இப்பொழுதுள்ள சங்கச் செய்யுட்களில் இனத்தைக் காண்கிலோம். பிற்காலத்தார் இயற்றியன பெரும்பான்மை இனங்களே. கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் பாரதம், பெரியபுராணம் முதலிய புராணங்கள், காவியங்கள் முதலியன இனங்களால் ஆயவை. சங்கத்திறுதிக்காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே இனம் தோன்றின. அவ்வாறு தோன்றியவற்றில் மிகப்பழையன தேவாரமும், நாலாயிரப் பிரபந்தமும். சங்ககாலத்தில் மருந்துக்கும் அகப்படாத இனம் இக்காலத்துத் தமிழ் இலக்கியங்களில் நிறைந்திருக்கிறது. சங்ககாலத்துக்குப் பின்னர் யாப்பிலக்கண நூல் எழுதிய அனைவரும் இனம் கொண்டனர். அவர் நூலெழுதியகாலத்திருந்த இலக்கிய

த்தை நோக்கிப் போலும்—சிலர் தாம் செய்த இலக்கணநூலை இனத்திலமைத்தனர். இவை காலத்தின் மகிமை..

ஓசை:—அடி, கட்டளையடி யென்றும், சீர்வகையடி யென்றும் இரண்டாம். எழுத்தைக் கணக்கிடுவதனாலாகும் அடி கட்டளையடி. சீரைக் கணக்கிடுவதனாலாகும் அடி சீர்வகையடி. செய்யுளியலில் "நாலெழுத் தாதியாக ஆறெழுத்-தேறிய நிலத்தே குறளடி யென்ப" (36) என்பது முதலிய சூத்திரங்கள் கட்டளையடியைச் சொல்லுவன. சான்றோர் முற்காலத்துக் கட்டளையடியாற் செய்யுள் இயற்றினர். பிற்காலத்து அது மாறியது. "ஆங்ஙனம் விரிப்பி னளவிறந் தனவே" (செய்-51) என்னும் சூத்திரவுரையில், பேராசிரியர் "இந்நூல் செய்த காலத்துத் தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாரும் அவ்வாறு கட்டளையடியாற் பயின்றுவரச் செய்யுள் செய்தாரென்பது இச்சூத்திரங்களாற் பெறுதும்.—பின்பு கடைச்சங்கத்தாருக்கு அஃது அரிதாதலின், சீர்வகையடிபயிலச் செய்யுள் செய்தாரென்றுணர்க." என்றும் எழுதியிருப்பது இதை விளக்கும். கட்டளையடி பயின்ற காலத்துச் சீர் பயிலவில்லையாதலால், தளையென்று அக்காலத்துக் கொண்டனர் என்பதற்கில்லை. இங்கு, பாவகையை எவ்வாறு அறிந்தனர் என்னும் வினா எழும். ஓசையைக் கொண்டு என்பது அதற்கு விடையாம். ஓசையாவது என்னவெனில், "மாத்திரை யெழுத்திய லசைவகை யெனா" என்னுஞ் செய்யுளியல் முதற்சூத்திரவுரையில், பேராசிரியர் "பாவென்பது சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லும் தெரியாமற் பாடமோதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்னசெய்யுள் என்று உணர்தற்கேதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை" என்றும், நச்சினார்க்கினியர் "பாவென்றது இவ்வுறுப்புக்களை யுடைத்தாய்ச் சேட்புலத்திருந்து சொல்லும் பொருளுந் தெரியாமல் ஒருவன் கூறியவழியும் இஃது என்ன செய்யுள் என்று அறிவதற்கேதுவாகிப் பரந்துபடச் செய்வதோர் ஓசையை" என்றும் எழுதியிருப்பன ஓசை இன்னதென்பதை விளக்கும். எழுத்தும் சொல்லும் தெரியாமல் என்று ஈண்டுக்கூறியது சீரும் தளையும் அறியக்கூடாமையைச் சுட்டும்; சீரை அறிந்தாலன்றித்

தளையை பெருமையால்.—இதனால், தளை வேறு; ஓசை வேறு; ஒன்று பிறிதொன்றாகாது என்பது வெளி. அவ்வோசை அகவலோசை, செப்பலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என நான்காய் விரியும். இவ்வோசையை விகற்பிப்பது எளிதன்றென்பது பேராசிரியர் ஓசையைப்பற்றிச் சொல்லுமிடத்து "இன்னோரன்ன பிறவும் பெரிதும் எஃகு செவியும் நுண்ணுணர்வுமுடையார்க்கன்றியுணரலாகா." என்றும், நச்சினார்க்கினியர் "இவ்வாறே பிறவும் வருத்துணர்த்துதல் அத்துறை போயினார்க்கே தெரிவதாம்." என்றும், யாப்பருங்கலவிருத்தியுடையார் "செப்பலிசையனவெண்பா" என்னும் சூத்திரவுரையில் "இவ்வோசை விகற்பமெல்லாம் வல்லார் வாய்க் கேட்பினல்லது காட்டலாகாவென்றறிக." என்றும், வீரசோழியவுரையுடையார் "நெடிலடி நான்கவை" (யாப்பு-18) என்னும் செய்யுள் உரையில் ஓரிடத்து "ஓசையாவது செவிப்புலனே கருவியாக அறிவதென்பது எல்லார்க்கும் உடம்பாடாதலாம்'' என்றும், வேறோரிடத்தில், "அன்றியும் வடநூற் புலவர்க்கு ஓசையூட்டுகவென்ப தில்லையெனக்கொள்க.—மேலும் அவர் பயில்வார்க்கரிதாக நூலைப் பெருக்குவதுஞ்செய்து அப்பெருமையில் யாப்புக்களையடக்க மாட்டாதே 'மிக்குங் குறைந்தும் வரினும் ஒருபுடையொப்புமை நோக்கி யொழிந்தவுங் கொளல்' என்று சூத்திரஞ்செய்தமையாலே யடங்கவுஞ் செய்திற்றிலர்; பயில்வார்க்கெளிதாகச் சுருங்கவுஞ் செய்திற்றிலர்; யாப்பதிகாரத்தினாற் பயனும் செய்யுளுக்கு ஒரு பெரிய ஏதுவேயாதலால், குற்றம் என்க." என்றும் சொல்லியுள்ளவையால் விளங்கும். இக்காலத்தார்பலர் தளையைக் கருவியாகக் கொண்டு பாக்களை விகற்பிக்கின்றார்; அவர் வடமொழிவழக்கையும், பின்கண்ட சூத்திரங்களையும் தமக் காதாரமென்பரோ? சூத்திரங்கள்,—

"வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
ஏந்திசைச் செப்பல் என்மனார் புலவர்."

"இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்ப லென்மனார் புலவர்."

"வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே யொழுகிசைச் செப்பல்."

"நேர்நே ரியற்றளை யான்வரு மகவலும்
நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலும்
ஆயிரு தளையுமொத் தாகிய அகவலும்
ஏந்தல் தூங்கல் ஒழுகல் என்று
வாய்ந்த நிரனிறை யாகு மென்ப."

"வெண்டளை தன்றளை யென்றிரு தன்மையின்
வெண்பா இயலது வெண்கலி யாகும்."

என்பவை போல்வன.

ஓசைக்கும் தளைக்குமுள்ள வேறுபாட்டைப் பேராசிரியர் நச்சினார்க்கினியர் இருவரும் "அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி" (செய்-11) என்னும் சூத்திரவுரையில் விரிவாய்க் காட்டியுள்ளார். இளம்பூரணரும் "அவ்வியல் பல்லது பாட்டாங்குக் கிளவார்." (செய்-86) என்னும் சூத்திரவுரையில் அதை வரைந்திருக்கின்றனர். நூல் என்னும் அடுத்த தலைப்பின்கீழ் அதை எழுதியிருக்கின்றேன். மேற் சொல்லியவற்றால் ஓசையுணர்வினது இன்றியமையாமையும், அவ்வுணர் வில்லாதார் தளையறிவைக்கொண்டு ஓசையுணர்வின் இன்மையை நிரப்ப முயல்வதும் புலனாகும்.

நூல்:—தொல்காப்பியர்காலத்து நூல் என்னும் சொல் உணர்த்திய பொருளுக்கும், இக்காலத்து அஃது உணர்த்தும் பொருளுக்கும் வேறுபாடு பெரிது. ஆசிரியர் மரபியலில் நூலுக்கு இலக்கணம் கூறிய சூத்திரம் பின்வருமாறுள்ளது. அது,

"ஒத்த சூத்திர முரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
யீரைங் குற்றமு மின்றி நேரிதின்
முப்பத் திருவகை யுத்தியொடு புணரின்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்."

என்பது. பேராசிரியர் இச்சூத்திரவுரையில், "சூத்திரமும் காண்டிகையும்உரையும் என மூன்றும், அவற்றோடு குற்றமின்மையும் உத்திவகையுங் கூட்ட நூலிலக்கணம் ஐந்தாயின" என்று எழுதியிருப்பதும் இதை விளக்கும். அடியிற்கண்ட செய்யுளியற் சூத்திரங்களும் ஈண்டுக் கவனிக்கத்தக்கன.

"அவற்றுள், நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலு முடிவு மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
யுண்ணின் றகன்ற வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே." (167)

"அதுவே தானு மீரிரு வகைத்தே." (168)

"ஒருபொரு ளுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
றாங்கனை மரபி னியலு மென்ப." (169)

மேற்கண்டவற்றுற் சூத்திரத்தானுயது நூலென விளங்கும். "மேற்கிளந் தெடுத்த" (70) என்னும் மரபியற்சூத்திரவுரையில், "பல சூத்திரந்தொடர்ந்து நூலாகி" என்று பேராசிரியர் எழுதியிருப்பது இதனை வற்புறுத்தும். "பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே—யங்கதம் முதுசொல் லவ்வேழ் நிலத்தும்" (79) என்னும் செய்யுளியற் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் "பாட்டுச்செய்யுள், உரைச்செய்யுள், நூற்செய்யுள் எனத் தமிழ்நாட்டார் வழங்கியவாறே பெயர் பெறும்" என்று எழுதியிருப்பது பாச்செய்யுள் வேறு, நூற்செய்யுள்வேறு என்பதைக் காட்டும். நூற்செய்யுள் என்று சொல்லப்படுவது சூத்திரம். பாச்செய்யுளுக்கு ஓசையுண்டு. உரைச்செய்யுள் நூற்செய்யுள்கட்கு ஓசையில்லை. "பாட்டிடை வைத்த குறிப்பி னானும்" (173) என்னும் செய்யுளியற் சூத்திரவுரையில், பேராசிரியர் "சூத்திரம் பாட்டெனப்படாவோ எனின், படா; பாட்டும் நூலும் உரையும் என வேறோதினமையின்" என்றும், நச்சினார்க்கினியர், "சூத்திரம் பாட்டெனப்படா; பாட்டும் உரையும் நூலுமென வேறோதலின்" என்றும் எழுதியிருப்பன சூத்திரத்தினுயது நூலென்பதையும், சூத்திரம் பாவினின்றும் வேறு என்பதையும் விளக்கும். "சிதைவெனப் படுபவை" (108) என்னும் மரபியற்சூத்திரவுரையில் "சூத்திரச் செய்யுள்" என்றும் "ஒத்தகாட்சி" (110) என்னும் அவ்வியற் சூத்திரவுரையில், "இவையும் நூற்கண்ணன்றி யொழிந்த செய்யுட்கு வருங்கால் விலக்கப்படுதலும்" என்றும் பேராசிரியர் கூறியிருப்பதும் இவ் வேறுபாட்டைக் காட்டும். "அவ்வியல் பல்லது பாட்டாங்குக் கிளவார்" (86) என்னும் செய்யுளியற் சூத்திர வுரையில் இளம்பூரணர் எழுதியிருப்பது ஈண்டுக் கவனிக்கத்தக்கது. அது மேற்சொல்லப்பட்ட

ஓசைவகையாலல்லது பாட்டாங்குக் கூறுறென்றவாறாயிற்று. பாட்டாங்குக் கூறலாவது ஓசையொழிந்து சீருந் தளையும் படக்கூறல். அவ்வாறு சொல்லுங்கால் பாட்டாங்காகாதென்பதூஉம், அடியுந் தொடையும் பெற்றுவந்ததாயினும் நூலின்பாற்படுதல் உரையின் பாற்படுதல் என்பதூஉங் கூறியவாறும். அது

"ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
யறுநூற் றிருபத் தைந்தா கும்மே." (செய்-50)

" என்பது ஆசிரியப்பாவிற்குரிய இலக்கணமுடைத்தாயினும் ஓசையின்மையான் ஆசிரிய மெனப்படாது நூலெனப்படுமென்று கொள்க" என்பது. மேலும், இவரே "பாட்டிடை வைத்த குறிப்பி னானும்" (173) என்னும் செய்யுளியற் சூத்திரவுரையில், "பல சொற்றொடர்ந்து பொருள்காட்டுவனவற்றுள் ஓசை தழீஇயவற்றைப் பாட்டென்றார். ஓசையின்றிச் செய்யுட்டன்மைத்தாய் வருவது நன்னூலெனப்பட்டது. அவ்வகையின்றிச் செய்யுட்டன்மைத்தாய் வருவது நூலெனப்பட்டது." என்று எழுதியிருப்பது இதை நன்கு விளக்கும். பிற்காலத்து நன்னூலாரும், "நூலினியல்பே நுவலின்" என்னும் சூத்திரத்தில், தொல்காப்பியர் சொன்னதைத் தழுவியே நூலுக்கு இலக்கணம் கூறினர். அச் சூத்திரத்தில், "சூத்திரங் காண்டிகை விருத்தியாகும்" என்னுஞ் சொற்கள் குறிப்பிடத்தக்கவை. இலக்கண விளக்க நூலுடையாரும், "நூலெனப்படுவது நுவலுங்காலை" (130) என்னும் பாட்டியற் சூத்திரத்தில், தொல்காப்பியரைத் தழுவி நூலிலக்கணஞ் சொல்லப்புகுந்து, அச்சூத்திரத்தில் "ஒருபொரு ளுதலிய சூத்திரத் தானும்" என்று சொல்லியிருப்பது மேற் சொல்லியதை வற்புறுத்தும். மேலும் அவரே அவ்வியல் "எஞ்சிய இலக்கண மெல்லாஞ் சொல்லின்" என்னும் முதற் சூத்திரத்தில், "பாட்டி னியலும் நூலி னியலும்" என வேறுபடுத்திக்காட்டி நூலுக்கும் பாட்டுக்கும் வெவ்வேறாக இலக்கணமும் அமைத்தனர். மயிலைநாதருள்ளிட்ட சில உரையாசிரியர்கள் பாரதம், நாலடி நானூறு, களவியல், சிந்தாமணி, சூளாமணி போல்வனவற்றை அகத்தியம் தொல்காப்பியத்தோடொப்ப நூல் என்றனர். நச்சினார்க்கினியர் சிந்தாமணி போல்வனவற்றைத்

தொடர்நிலைச் செய்யுளென்பரேயன்றி நூலென்னர். உரையாசிரியர் பலர் இடைச்சங்கம், கடைச்சங்கம் இவற்றிற்கு நூல் அகத்தியமுந்தொல்காப்பியமும் என்று சூத்திரத்தானுயவற்றைச் சொல்லிப் பாச்செய்யுளின் வேறு படுத்தியே கூறுகின்றனர். களவியனுரையுடையாரும் அடியார்க்கு நல்லாரும் இவ்வகுப்பினர். கிரந்தம் என்னும் வடசொல்லைப் புத்தகம் என்னும் பொருளில் உபயோகப் படுத்துவதுபோல நூல் என்னும் சொல்லை இக்காலத்துத் தமிழர் உபயோகிக்கின்றனர். ஓசையோடுகூடிய வஞ்சிப்பா, கலிப்பா, தனிநிலைச் செய்யுட்கள் முதலியவற்றையும், ஓசை பெறாத முப்பத்திரண்டு பதுமைக்கதை, மதனகாமராஜன் கதைபோன்ற உரைநடைகளையும் இக்காலத்தார் நூல் என்கின்றனர். தொல்காப்பியர் முதனூல், வழிநூல் என நூல் இரண்டு வகையதென்றனர். பிற்காலத்தார் அவ்விரண்டனோடு புடைநூல் அல்லது சார்புநூல் என ஒன்றைக்கூட்டி நூல் மூன்று வகையதென்றனர்.

பாட்டியல்:—சங்ககாலத்து அகத்தியர் பாட்டியல், பரணர் பாட்டியல், பன்னிருபாட்டியல் முதலிய பாட்டியல் நூல்கள் இருந்தன என்பர். பன்னிருபாட்டியல் இப்பொழுதுளது. நவநீதப் பாட்டியல் என்றும் ஒரு நூலுளது. பிற்காலத்து வெண்பாப் பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், வரையறுத்த பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல் போன்ற நூல்கள் உண்டாயின. பன்னிரு பாட்டியலிற் சாதகம் என்னும் பாட்டைச் சொல்லுமிடத்து,

"தோற்றிய சாதகஞ் சாற்றுங் காலைப்
பற்றிய கலியுகத் தூற்ற யாண்டிற்
றிருந்திய சகாத்தமு மாண்டும் பொருந்திய
ஞாயிறும் பக்கமும் மேய வாரமும்
இராசியு மன்னுற மொழிதற் குரிய"

என்னுஞ் சூத்திரம் காணப்படுகிறது. சகாத்தத்தைச் சொல்லியிருப்பது சாலிவாகன சகாத்தமாயிருத்தல்வேண்டும். தமிழ்நாட்டில் வேறு சகாத்தம் வழக்கிலிருந்ததாகத் தெரியவில்லை. ஆதலால் கி. பி. 78-ம் ஆண்டுக்குப்பிறகு இந்நூல் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். இதை இயற்றியோர் சங்கப்புலவரில் பரணர், சீத்தலையார், அவிநயனார், கல்லாடனார், பொய்கையார் முதலியோராதலால், இது, சங்கத்திறுதிக்காலமாகிய கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்

பகுதிக்கு முந்தி இயற்றப்பட்டிருத்தல்வேண்டும். வெண்பாப் பாட்டியல் நேமிநாதராலியற்றப்பட்டது. இப்புத்தகத்தைப்பற்றிப் பிற்பாகம் மூன்றாங் காலப்பகுதியிற் சொல்லியிருப்பதைப்பார்க்க. சிதம்பரப்பாட்டியலுடையார் சரித்திரத்தை நாலாங்காலப் பகுதியிற் பார்க்க. இலக்கண விளக்கமுடையார் சரித்திரமும் அப்பகுதியினதே. பலவகைப்பாட்டுக்களின் இலக்கணங்கூறும் நூல் பாட்டியல் எனப்படும். சங்ககாலத்திருந்த பாட்டின் விகற்பங்களுக்கும், பிற்காலத்துப் பாட்டு விகற்பங்களுக்கும் பல வேறுபாடுகள் உள. பன்னிரு பாட்டியல் முதல் ஒவ்வொரு பாட்டியலிலுமுள்ள விகற்பங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதனால் அவை விளங்கும். வேறுபாடுகளிற் சிலவற்றையே ஈண்டுக் குறிக்கின்றேன். பன்னிருபாட்டியலிற் பெருங்காப்பியம், காப்பியம் என்னும் பெயர்கள் காணக்கிடையா. இக்காலத்துப் பன்னிரு பாட்டியற்பதிப்பில் ஒரு மூலையில் காப்பியம் என்னும் சொல் காணப்படுகிறது. அடியார்க்கு நல்லார் நச்சினார்க்கினியர் இருவரும் அச்சொல் அதிற் காணப்படிற் குறிப்பிட்டிருப்பரென்பது திண்ணம். தொடர்நிலைச் செய்யுள் என்னும் பெயர் உளது. பன்னிரு பாட்டியலில் அதற்குச் சொல்லியிருக்கும் இலக்கணத்திற்கும் பிற்காலத்துப் பாட்டியல்களிற் காணப்படும் இலக்கணத்திற்கும் சில பேதங்கள் உள. பிற்காலத்தார் தொடர்நிலைச் செய்யுளைப் பெருங்காப்பியம், காப்பியமெனப் பிரித்தனர். சிலர் தொடர்நிலைச் செய்யுள் என்னும் பெயரையே சொல்லாது பெருங்காப்பியம், காப்பியம் இவற்றுக்கு இலக்கணங் கூறினர். சிலப்பதிகாரத்திற்குக் காவியம் என்னும் பெயரிட்டு நியாயம் எழுதினர் அடியார்க்கு நல்லார். அதை மறுத்து எழுதினர் நச்சினார்க்கினியர். நச்சினார்க்கினியர் சிந்தாமணி, சிலப்பதிகாரம் போல்வனவற்றைத் தொடர்நிலைச் செய்யுள் என்பர். காப்பியம் அல்லது பெருங்காப்பிய மென்னார். புராணமென்பது இக்காலத்துச் சொல்லப்படுமியல்பிற் சங்ககாலத்திலிருந்ததாகத் தெரியவில்லை. பன்னிருபாட்டியலில் அப்பெயர் இல்லை. சிதம்பரப் பாட்டியலில் உளது. இலக்கணவிளக்க நூலுடையார் பாட்டின் விகற்பங்களைத் தொடர்நிலைச் செய்யுள், தனிநிலைச் செய்யுளின் விகற்பங்களாயமைத்து இலக்கணம் கூறினர். அவர், அணியியலில் "அவற்றுட்-பெருங்காப் பியமே காப்பிய மென்றாங்-கிரண்டா் வியலும்

பொருட்டொடர் நிலையே" (8) என்று சூத்திரித்திருப்பதை நோக்கப் பன்னிரு பாட்டியலிற் சொல்லிய பாட்டின் விகற்பங்களெல்லாம் பெருங்காப்பியம், காப்பிய மென்பதில் அடங்குமென்பது அவர் கருத்தென விளங்கும். பிற்காலத்தார் பாட்டின் விகற்பத்தைப் பெருக்கி 96 என விரிப்பர். நாலாயிரப்பிரபந்தத்துக்கு அப்பெயர் வழங்கியது பிற்காலத்து வழக்குப்பற்றிப்போலும்! சங்ககாலத்துச் செய்யுள்களுக்குக் காப்பியம், பிரபந்தம் என்னும் பெயர் அக்காலத்து வழங்கியதாகத் தெரியவில்லை.

செய்யுளியல் பொருளதிகாரத்தின் பாற்படுவதேன்? தொல்காப்பியர் செய்யுளுறுப்பு முப்பத்து நான்கில், பொருள் ஒன்று என்றனர். செய்யுளுறுப்பென அவர் கூறிய எட்டுவனப்பும் பொருளன்றோ? "மாத்திரை யெழுத்திய லசைவகை யெனாஅ" என்னும் முதற் சூத்திரவுரையில் பேராசிரியர் "மற்றுச் செய்யுளுறுப்பு ஈண்டோதினர்; செய்யுள் யாண்டோதுப எனின், அறியாது கடாயினாய், உறுப்பென்பன உறுப்புடைப்பொருளின் வேறெனப்படா; பொருளெனப்படுவன உறுப்பே; அவற்ற தீட்டத்தினை முதலென வழங்குபவாகலான் உறுப்பினையே சொல்லியொழிந்தார்" என்று கூறியவற்றால், செய்யுளுறுப்பெல்லாம் பொருள் என்பதும், உறுப்பும் உறுப்புடைப் பொருளாகிய செய்யுளும் வேறெனப்படாவென்பதும் விளங்கும். பொருளை உறுப்பாயுடையதற்கு இலக்கணங் கூறுமிடம் பொருளதிகாரத்தைத் தவிர்த்து வேறு யாதாயிருத்தல் இயல்புடைத்தாம்? வாழ்த்து வசை முதலிய பொருள்கள் இன்னின்னபாவில் அமைக்கப்படவேண்டுமென்று விதிப்பதற்குப் பொருளதிகாரமே இடமன்றோ? இலக்கணவிளக்க நூலுடையாரும் "பொருட்கிடஞ் செய்யு ளாதலி னதனைத்—தெரிப்பது மதனது திறனெனல் வரையார்" (அணி-2) என்றதும் இக்கருத்தேபற்றி எனக் கொள்க. இச்செய்யுளியலில் வேறுபாடு பலவுளவேனும் ஈண்டுச் சிலவற்றையே காட்டினேன்.

இது நிற்க, முற்காலத்தார் நிகழ்ந்த சரித்திரங்களைத் தாம் அறிந்தவாறு கூறினர். பிற்காலத்தார் அவற்றைத் திரித்தும் பெருக்கியும் குறைத்தும் கூறுவர். முற்காலத்துச் செய்யுட்களில் தன்மையணி அல்லது சுபாவோக்தியலங்காரம் என்னும் பொருள்கள்

பெருகிக் கிடக்கின்றன. பிற்காலத்தார் செய்யுட்களில் அதிசயோக்தியின் பெருக்கத்தையே பார்க்கலாம்.

பொருளிலக்கணம்:—உரையாசிரியரெனப்படும் இளம்பூரணர் கொள்கையைத் தழுவி இதை எழுதுகின்றேன். பொருள் என்பது சொல்லினாலுணரப்பட்டது என முன்னமே சொல்லியிருக்கிறேன். சாதாரணமாய் உலகத்திற் பொருள் என்பதை உருவப்பொருள் எனக் கொள்ளுகிறார்கள். ஈண்டுப் பொருள் என்பது அது மட்டுமன்று: வினையையும் பண்பையும் உணர்த்தும். அப்பொருள் முதல் கரு உரி என மூவகைப்படும். முதற்பொருள் நிலனும் காலமும் என இருவகைப்படும். நிலன் என்பது இடம். காலம் இடம் என்பவற்றை ஆங்கிலேயர் டைம் அண்டு ஸ்பேஸ் என்பர். இவ்விரண்டின் தோற்றமும் ஈறும் மனத்திற் கெட்டாதனவாம். முதலிற் காலத்தை எடுத்துக் கொள்ளுவோம். நமக்குமுன் தோன்றியவர் யாவர்? அவருக்குமுன் யாவர்? அவருக்குமுன் யாவர்? என நெடுக விசாரித்துக்கொண்டு போனால் இந்த உலகம் உற்பத்தியான காலத்தை யெட்டியதாக வைத்துக்கொள்ளுவோம். உலக உற்பத்திக்குமுன் இருந்ததென்ன? அதற்குமுன் இருந்ததென்ன? அதற்குமுன் இருந்ததென்ன? என்று விசாரித்துக் கொண்டுபோனால் முடிவு ஏற்படாது. காலத்தின் தோற்றம் நம் மனத்திற் கெட்டாததெனத்தெரியும். அவ்வாறே நமக்குப் பிற்காலத்து இருக்கப்போவதென்ன? அதற்குப் பிறகு இருக்கப்போவதென்ன? அதற்குப் பிறகு என்ன? என நெடுக விசாரித்துக் கொண்டுபோனால் முடிவு ஏற்படாது. காலத்தின் ஈறும் மனத்திற் கெட்டாததெனத் தெரியும். இடத்தையும் இதுபோலவே நாமிருக்கு மிடத்திலிருந்து ஒவ்வொரு பக்கத்திலும் அப்பாலுள்ளது என்ன? அதற்கப்பால் என்ன? என நெடுக விசாரித்துக் கொண்டுபோனால் அதற்கும் தோற்றமும் ஈறும் மனத்திற் கெட்டாததெனத் தெரியும். ஏனைய இரண்டு பொருளும் முதற் பொருளிற் றோன்றுவனவாம். காலத்திலும் இடத்திலும் தோன்றாத பொருள் இல்லை. தோற்றமும் ஈறும் அறியவொண்ணாத பொருளுக்கு இலக்கணம் சொல்ல இயலாதாகையால் தொல்காப்பியர் இடத்திற்குத் தமிழ்நாட்டையும், காலத்துக்கு ஒரு யாண்டையும் எடுத்துக்கொண்டு இலக்கணம் கூறினர்.

விசாலித்துப் பரந்த இடத்தையுடைய இந்த உலகத்தின் ஒரு பகுதியாகிய தமிழ் நாட்டிற்குச் சொன்ன இலக்கணமே மற்றப் பகுதிகளுக்கும் பெரும்பாலும் பொருந்தும். அவ்வாறே ஒருயாண்டுக்குச் சொன்னது பிற காலத்துக்குமாம். கருப்பொருளாவது இடத்திலும் காலத்திலும் தோன்றும் பொருள். அவை, "தெய்வ முணவே மாமரம் புட்பறை—செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ—அவ்வகை பிறவுங் கருவென மொழிப" (தொல். பொருள். அகத்–18) என்பதனால் விளங்கும். மக்களும் கருப்பொருள் ஆவர். உரிப்பொருளாவது மக்கட்குரியபொருள். திணை ஒழுக்கம் உரிப்பொருள் என்பன ஒரு பொருட்கிளவியாம். உரிப்பொருளைத் "திணைக்குரிப்பொருளே" (தொல்–பொரு–அகத்–14) என்று தொல்காப்பியர் சொல்லியிருக்க, மக்கட் குரிப்பொருள் என்பதென்னை யெனின், மக்கட் குரியவொழுக்கத்தைத் திணையென்றாராகலின் அது பொருத்த முடையதேயாம் என்க. மேற்சொல்லியதனானே உலகத்துப் பொருள் எல்லாம் முதல், கரு, உரி என்னும் பகுப்பில் அடங்கும். தொல்காப்பியர் தமிழ்மக்களின் பொருட்டு இலக்கணம் சொல்லப்புகுந்தாராதலின், பொருளதிகாரத்தில் அக்காலத்துத் தமிழ்மக்களது ஒழுக்கம் அல்லது திணைக்கு இலக்கணம் சொல்வதை மேற்கொண்டனர். தமிழ்மக்கள் ஒழுக்கத்தை அகம் புறம் என இரண்டாகப் பிரித்தனர். அதவாது உள் ஒழுக்கம் வெளிஒழுக்கம் என. அறம் பொருள் இன்பம் வீடு என்பன உரிப்பொருளிலடங்கும். வடநூலார் இவற்றைத் தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்பர். இவற்றுள், இன்பமே காமம் எனப்படும். ஆசிரியர் தொல்காப்பியனாரும், திருவள்ளுவனாரும் காமம் என்னும் மொழியையே கொண்டனர். தொல்காப்பியர் காலத்திருந்த தமிழ்மக்களின் ஒழுக்கத்தை அவர் பதினன்காகப்பகுத்து அவற்றில் அகவொழுக்கமாகிய அகத்திணைக்கு ஏழும் புறவொழுக்கமாகிய புறத்திணைக்கு ஏழும் ஆக அமைத்தனர். அகத்திணையேழில், காமத்தையும், புறத்திணையேழில் ஒழிந்த அறம், பொருள், வீட்டையும் விரித்தனர். அவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லாநிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படுவதன்றாகலான், புறத்தில் வீடுபேற்றிற்குரிய வானப்பிரத்த சன்னியாசிகளி

யல்புங் கூறினர். இன்பம் காரணமாகப் பொருள்தேடுதலானும், பொருளானே அறஞ்செய்யலானும் இன்பத்தைக் கூறும் அகத்திணை யியலை முன்வைத்துப் பொருளையும் அறத்தையும் கூறும் புறத்திணை யியலைப் பின்வைத்தனர். இன்பம் அல்லது காமத்தை ஒருதலைக்காமம், ஒத்தகாமம், பொருந்தாக்காமம் என மூன்றாகப் பகுத்தனர். அகத்திணை யியலில், கைக்கிளை என்பது ஒரு தலைக் காமம். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் திணைகள் ஒத்த காமம். இவற்றைக் களவியலில் இறையனார் அன்பின் ஐந்திணை என்றனர். பெருந்திணை யென்பது பொருந்தாக்காமம். இவற்றில் ஒத்தகாமமே சிறப்புடையதாகலின் நிலத்தை ஐந்தாகப் பிரித்து, அன்பினைந்திணைக்கும் திணைக்கு ஒவ்வொன்றாக நிலத்தை அமைத்தனர்; அவ்வாறு அமைத்த நிலத்தில் அவ்வொழுக்கம் பெரும்பான்மை நடைபெற்றமையால். குறிஞ்சி முதலாக மேற்கூறிய ஐந்திணைகளையே, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்றனர் என்பது உரையாசிரியர் "அகமாவது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடலெனவும்; கைக்கிளை, பெருந்திணை எனவும் எழுவகைப்படும்" என அகத்திணையியல் முதற்சூத்திரவுரையில் எழுதியிருப்பதால் விளங்கும். அறம் பொருள் இன்பம் வீடு என விகற்பித்துக்கூறினாரேனும் அவை ஒன்றோடொன்று விரவியே நிற்கும். "அகத்திணையாவது அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின் வழாமலும் இயலல்வேண்டும்" என்று உரையாசிரியர் "அடியோர் பாங்கினும்" (அகத்—23) என்னும் சூத்திரவுரையில் எழுதியிருப்பதாலும் அதை அறியலாம். மேலும் கற்பியலில் தலைவனையும் தலைவியையும்பற்றிச் சொல்லுமிடத்து,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே." (51)

என்று சூத்திரம் செய்திருப்பதும் நான் சொன்னதை ஆதரிக்கும். அகத்திணையை, அகத்திணையியல், களவியல், கற்பியல் என்னும் இயல்களில் தொல்காப்பியர் சொன்னார். தலைவனும் தலைவியும் பிற

மறியாமல் தனித்துக்கூடும் வழக்கம் பெரும்பாலும் அக்காலத்துத் தமிழர்களுக்குள் நடைபெற்றது. அது யாழோர்கூட்டம் அல்லது காந்தர்வ விவாகத்தை யொத்தது. பிறர் அறிந்தாலும் அல்லது பெற்றோர் தலைவியைக் கொடுக்கப்பெற்றாலும் அது கற்பெனப்படும். அக்காலத்து மணம் நிகழ்வதற்கு மந்திரத்தோடு சடங்குகளில்லை. களவொழுக்கத்தால் நேரிடும் தீங்குகள் வாராமற்காக்க ஆரியர் அவைகளை அமைத்தனரென்பது, "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்—ஐயர் யாத்தனர் காரண மென்ப" (கற்பியல்—4) என்னுஞ் சூத்திரத்தால் விளங்கும்.

புறத்திணையும் உரிப்பொருளில் அடங்குமென்று சொல்லியிருக்கிறேன். புறத்திணையியலிற் சொல்லப்பட்ட புருஷார்த்தங்களும் காமத்தொடு விரவிய என்பது பின்கண்ட பன்னிருபடலச் சூத்திரத்தால் விளங்கும். அது,

"ஆன்ற சிறப்பி னறம்பொரு ளின்பமென
மூன்றுவகை நுதலிய துலக மவற்றுள்
அறனு மின்பமு மகலா தாகிப்
புறனெனப் படுவது பொருள்குறித் தன்றே."

என்பது புறத்திணை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்பகுதி என எழுவகைப்படும். அவையாவன: நிரைகோடல், பகைவயிற்சேறல், எயில்வளைத்தல், இருபெருவேந்தரும் ஒருகளத்துப் பொருதல், வென்றி, நிலையாமை, புகழ்ச்சி என்பனவாம். இவற்றை அகத்திணையாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை இவற்றிற்கு முறையே புறன் என்பர். வீடு கூற இயலாதாயினும் வீடுபேற்றுக்குக் காரணமாகிய "நாலிரு வழக்கிற் றாபதப் பக்கம்" (புறத்-20) "காமநீத்த பால்" (புறத்-21) முதலியவற்றை இவ்வியலிற் கூறினர். "நாலிரு வழக்கிற் றாபதப் பக்க" மாவது:—

"நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை தாழச் சுடரோம்பி—யூரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி." (புறப்-வெண்-வாகை-14)

என்பது. காமநீத்தபாலாவது ஆசையை அறவிடுத்தல். அது,

"காமம் வெகுளி மயக்க மிவைமூன்றின்
நாமங் கெடக்கெடு நோய்." (குறள்-மெய்யுணர்-10)

என்பது.

பொருளதிகாரத்தில் அகத்திணையைச் சொல்லும் மூன்று இயலையும், புறத்திணையைச்சொல்லும் ஒரு இயலையும் இதுவரையிற் சொன்னேன். ஒழிந்த ஐந்தியல்களில் பொருளியலில் அகம் புறம் என இரண்டனையும் பற்றிவரும் பொருளியல்பும், மெய்ப்பாட்டியலில் அகம் புறம் என்னும் இருபொருட்கண்ணும் குறிப்புப்பற்றி நிகழும் மெய்ப்பாட்டியல்பும், உவமவியலில் வடிவும் தொழிலும் பண்பும் பயனும் பற்றி உவமிக்கப்படும் உவமவியல்பும், செய்யுளியலில் மூவகைச் செய்யுளியல்பும், மரபியலில் வழக்கிலக்கணமும் ஆசிரியர் உணர்த்தினர். பிற்காலத்தில் அகத்திணையைச் சொல்லும் இறையனாரகப் பொருள், நாற்கவிராஜநம்பி அகப்பொருள் விளக்கம், புறத்திணையைச் சொல்லும் ஐயனாரிதனாரியற்றிய புறப்பொருள் வெண்பாமாலை முதலியனவும், ஐந்திலக்கணமும் சொல்லப் பல நூல்களும் உண்டாயின. முற்காலத்திருந்த அகவொழுக்கமும் புறவொழுக்கமும் பெரும்பான்மை மாறின. களவுப்புணர்ச்சி, ஆகோடல் முதலியன இக்காலத்துக்கு முற்றும் பொருந்தாதவை. பண்டைச் செய்யுள்களையறிவதற்கு அகத்திணையிலக்கணமும் புறத்திணையிலக்கணமும் பயன்படும். இக்காலத் தொழுக்கம்பலவற்றுக்குப்பண்டையிலக்கணம் பயன் படா. தொல்காப்பியர் ஒத்தகாமத்திணைகளை ஐந்தாகப் பிரித்தனரே யன்றி அவைகளைப் பிரித்துத் துறை கூறிற்றிலர். பிற்காலத்தார் சிலர் அகத்திணைத்துறைகளை 400 ஆக்கினர். சிலர் 600 ஆக்கினர். ஒருவர் 900-ம் ஆக்கித் தாமியற்றுங் கோவை முற்றுப்பெறுவதன்முன் காலஞ்சென்றனர். பன்னிருபாட்டியலுடையார் அகப்பொருட் கோவையைப் பாட்டின் பிரிவுகளில் ஒன்றாக்கினர். துறைவிபாம் கூறிற்றிலர். சங்க காலத்துச் செய்யுள்களிலெல்லாம் ஐந்திணையே கூறப்பட்டுள்ளன. துறைபகுப்புக்களைக்காணேம். புறத்திணைக்குத் துறைப்பெயர் வகுத்தனர்.

எழுத்தும், சொல்லும்:—எழுத்திலக்கணம் சொல்லிலக்கணங்களிலுள்ள வேறுபாடுகளையெல்லாம் எழுதுவதானால் ஒரு புத்தக

மாகும். சிலவற்றையே ஈண்டுக் காட்டுகின்றேன்.

1. தொல்காப்பியம் இயற்றியகாலத்து, ச, சை, சௌ என்னும் எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாராவென்பது "சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே—அ,ஐ,ஔ வெனு மூன்றலங் கடையே" (தொல். எழுத்-மொழி—29) என அவர் சூத்திரஞ் செய்ததனால் தெரிகிறது. இவை சங்கத்திறுதிக் காலத்துக்குமுன்னரே வழக்கு வீழ்ந்துவிட்டன. சங்கம் என்னும் மொழியே அதற்கு ஒரு சான்றாம். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலியவற்றில் ச, சை என்னும் எழுத்துக்களை முதலாகவுடையமொழி பல காணப்படுகின்றன. சௌந்தர பாண்டியன் என்பதுபோலச் சௌ என்னும் எழுத்தை முதலாகவுடைய மொழிகளும் இக்காலத்துப் பலவுள.

2. உண்ணும், செய்யும் என்னும் பெயரெச்சப்பொருளில் உண்மன, செய்ம்மன என முற்காலத்து வழங்கியன இக்காலத்து ஒழிந்தன.

3. இயற்பெயரைப் பின்னும் சிறப்புப் பெயரை முன்னும் வைத்து, "முனிவன் அகத்தியன்" என்றாற்போல முற்காலத்து வழங்கியன இக்காலத்து இடம் மாறின.

4. திசைச்சொல்லிலக்கணம் தொல்காப்பியர் சொன்னதினின்றும் முற்றும் மாறியது.

5. அதோளி, இதோளி, உதோளி, குயின், அழன், புழன் என்னும் பழைய மொழிகள் வழக்கிற் கழிந்தன.

6. கி. பி. பத்தாம் நூற்றாண்டில் தமிழ் எழுத்துக்களின் உருவம் மாறியது. அதற்குமுன் இருந்தது வட்டெழுத்தெனப்படும்.

தமிழின் அபிவிருத்தி:—முதன் முதல், உள்ள தமிழ்ச்செய்யுள்களை இறந்துபடாமற் பாதுகாப்பது தமிழரின் பெருங்கடமையாம். செய்யுள் என்பன நூற்செய்யுள், உரைச்செய்யுள், பாச்செய்யுள் என்னுமிவை. இவற்றுள் பிற்காலத்தார் செய்தன சில போற்றற்குரியனவோ என்பது ஆராய்தற்பாலது. முற்காலத்துச் சான்றோர் செய்த அரிய செய்யுள்கள் இறந்தனபோக எஞ்சியவற்றிற் பல, பல பெரியோர்களின் நன்முயற்சியால் அச்சில் வெளிவந்துள்ளன. ஆத

ரிக்கும் வள்ளல்கள் உளரேல் மற்றவையும் இதுகாறும் வெளிவந் திருக்கலாம். அச்சிட்ட புத்தகங்களை மேல்நாட்டார்போல விலை கொடுத்து வாங்குவோர் பல்லாயிரவர் இந்நாட்டில் இருப்பினும் வெளிவந்திருக்கலாம். வங்கநாட்டில் ரவீந்திரநாதர் என்னும் உலக மெங்கணும் புகழ்பெற்ற மகாகவி ஒருவர் இருப்பது யாவருமறிந் தது. அவர் எழுதிய புத்தகமொன்று ஜர்மனி தேசத்தில் உலகப் பெரும்போரால் அத்தேசத்தார் எல்லா நாடியும் ஒடுங்கியிருக்கும் இக்காலத்தில், ஒருபதிப்பில் முப்பதுலக்ஷம் பிரதி அச்சிடப்பட் டன எனத் தெரிகிறது. மேல் நாடுகளில் விலைக்கு வாங்கிப் புத்தகம் படிப்போர் தொகைப் பெருக்கத்துக்கு இது சான்றும், மெகாலே என்று ஆங்கிலப் புலவரொருவர் பல ஆண்டுகளுக்குமுன் இருந்தார். அவர் ஆங்கில நாட்டுச் சரித்திரம் எழுதி அதை விற்றதொகையைப் பெறுவதற்கு ஒரு தடவையில் நான்கு லக்ஷ ரூபாவுக்குச் செக்குக் கொடுத்தாரென்று அவர் சரித்திரத்தில் எழுதியிருக்கிறது. மேல் நாடுகளில், புத்தகம் எழுதிப் பெரும்பணக்காரரானோர் அநேகர். நமது நாட்டில் அவ்வாறு படிப்போர் தொகை மிகவுங் குறைவு. அருமையான பண்டை நூல்களை உலகத்துக்குப் பயன்படுமாறு பெரு முயற்சிசெய்து அச்சிட்டு வெளியிட்ட சில சான்றோர் தாம் அதற்குச் செலவிட்ட பணமும் கிடைக்கப்பெறாது வருந்துகின்ற னர். நமது நாட்டில் தமிழ்க்கல்வியைப் பெருக்கினால் இக்குறை தீரும். தமிழறிஞர்பலரது இடுக்கணும் தொலையும். அதைப் பெருக்குவது தமிழரது முக்கிய கடமையென்பதில் ஐயமென்னை? உள்ள தமிழ்க்கல்வி இழந்துபோகாமல் இருப்பதற்கும் அதை நிறை வேற்றவேண்டியது அவசியமன்றோ? அது பரவி விருத்தியடைவ தற்கு நாம் கைக்கொள்ளவேண்டிய உபாயங்களை எனக்குத் தோன் றியவரையிற் பின் எழுதுவேன்.

தமிழ்மொழி மிக்க மேன்மையையும் அகற்சியையும் உடைய தாயினும் சில குறைகளையுமுடையதென்பதை மறுத்தற்கில்லை. அம் மொழியைச் சான்றோர் வழக்கு, செய்யுள் என இரண்டாகப் பகுத் தனர். வழக்கென்பது உலகவழக்கு. பின்கண்ட நன்னூற் சூத் திரம் இதை விளக்கும். அது,

"இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றுரு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்" (பெயரியல்-10)

என்பது. இச்சூத்திரவுரையில், சங்கரநமச்சிவாயப்புலவர், "இயற்சொல்லாகிய உலகவழக்கையும், திரிசொல் திசைச்சொல் வடசொல்லாகிய செய்யுள் வழக்கையும்" என்று எழுதியிருப்பது கவனிக்கத் தக்கது. "யார்க்குந்—தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்" (நன்—பெய—14) என்றதனால் உலக வழக்கென்பது பெரும்பான்மை பேச்சுவழக்கென்று பொருள்படும். மரபியலில் தொல்காப்பியர் "வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே—நிகழ்ச்சி யவர்கட் டாகலான" (92) என்று சூத்திரஞ் செய்திருப்பதைக்கொண்டு வழக்கென்பதற்கு வேறு பொருள் கூறுவாருமுளர். செய்யுளென்பது "பாட்டு உரை நூல்" என மூவகைப்படும். செய்யுளிலக்கணத்தை நன்னூலார் பின்கண்ட சூத்திரத்திற் கூறுகின்றனர். அது,

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்" (பெயரியல்-11)

என்பது. செய்யுள் அறிஞர்களாற் புனையப்படுவது. அது பெரும்பாலும் எழுத்திலமைக்கப்படும். நூற்செய்யுள், பாச்செய்யுளிரண்டும் தமிழில் மிகுந்திருக்கின்றன. ஆயினும் நூலிற் சிலமாறுதல்கள் செய்ய வேண்டியன உளவென்று நினைக்கிறேன். உரைச்செய்யுள் அல்லது பாச்செய்யுளுக்கும் அவைகளின் பொருளை விளக்கிச் சில உரையாசிரியர்கள் எழுதியன உள. தொல்காப்பியர்,

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப" (174)

என்று செய்யுளியலிற் சொல்லிய சூத்திரவுரையில் உரையாசிரியர்கள் "பாட்டிடை வைத்த குறிப்பி னானும் என்பது ஒரு பாட்டினை இடை யிடை கொண்டு நிற்குங் கருத்தினான் வருவன ... அவை தகடூர் யாத்திரையும் சிலப்பதிகாரமும் போல்வன" என்றும், "பாவின் றெழுந்த கிளவியானும் என்பது பாட்டின்றிச் சூத்திரத்திற்குப்

பொருளெழுதுவன போல்வன" என்றும், "பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும் என்பது ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லுவன; அவை ஓர் யானேயும் குரீஇயும் தம்முள் நட்பாடி இன்னுழிச்சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக்கியையாப் பொருள்படத் தொடர் நிலையான் ஒருவன் கற்று வரலாற்று முறையான் வருகின்றன" என்றும், "பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் என்பது பொய்யெனப்படாது மெய்யெனப் பட்டும் நகுதற் கேதுவாகுந் தொடர்நிலை....அவையாவன சிறுகுரீஇயுரையும் தந்திரவாக்கியமும் போல்வன" என்றும் எழுதியுள்ளமையால் முற்காலத்தில் தொடர்நிலைச்செய்யுள்களுட் பாட்டுக்களுக்கிடை யிடையே விடயங்களும், சூத்திரங்களுக்குப் பொருளும், பொய்க் கதையும், வேடிக்கைக்கதையும் உரைநடையில் எழுதப் பட்டன என்பது விளங்குகிறது. ஆங்கிலம், பிரான்சு, ஜர்மன் முதலிய மேல்நாட்டுப் பாஷைகளில், சகல சாஸ்திரங்களும் சரித்திரங்களும் மற்றுமுள்ளனவுமெல்லாம் உரைநடையில்எழுதப்படுகின்றன. பொருள்களை அழகாயும் தெளிவாயும் வன்மையுடனும் விவரிப்பதில் அம்மொழிகளிலுள்ள உரைநடை மிகச்சிறந்தவை. தமிழிலோ மதம், ஜோசியம், வைத்தியம், பரதம், இசை, மற்றுமுள்ள கலைகள், நீதி நூல், புராணம் முதலிய யாவும் பாச்செய்யுளிற் சொல்லப்படுகின்றன. அவைகளிலுள்ள திரிசொல், சந்தி, சொற்றொகுதியின் அமைவு இவைகளாற் பொருள் எளிதிற் புலப்படுகிறதில்லை. நன்றாய்க் கற்றுணர்ந்தோர்க்கன்றி அவை பயன்படுவது அரிது. சொற்றொடரின் பொருளையறிவதற்கே பெரும்பாலும் பாடம் கேட்டாக வேண்டியதாயிருக்கிறது. அவற்றிற் சொல்லியிருக்கும் விஷயம் கடினமாயிருந்தால் அதை அறிவதற்குள்ள கஷ்டம் தனி. வைஷ்ணவர்கள் மதசம்பந்தமான விஷயங்களையும் ஆழ்வார்கள் முதலியோர் சரித்திரங்களையும் அவற்றை அறிய விரும்பும் மக்கள் எளிதில் உணரும்பொருட்டு மணிப்பிரவாள உரை நடையில் எழுதியிருக்கின்றனர். மணிப்பிரவாளம் என்பது ஆரியர், ஆருகதர், பௌத்தர் இவர்கள் தென்னாடு போந்து வடமொழியிலுள்ள விஷயங்களைத் தமிழிற்சொல்ல முயன்றபோது உண்டாகியது. மணி என்பது

முத்து. பிரவாளம் என்பது பவளம். முத்தையும் பவளத்தையும் கோத்ததுபோல வடமொழியும் தென்மொழியும் கோத்தமொழித் தொடர் என்பது பொருள். இவற்றில் எதுமுத்து? எதுபவளம்? என்பதைத் தீர்மானிப்பதில் ஆக்ஷேபமுண்டாகுமென்பதில் ஐயமில்லை. மணிப்பிரவாள நடையைக் கைக்கொள்ளாவிட்டால் திருவாய்மொழி வியாக்கியானங்களிலுள்ள பொருள்களைச் சுத்தத் தமிழிற் புலப்படுத்த முடியுமென்று தோன்றவில்லை. மணிப்பிரவாளம் பாச்செய்யுள்களிலும் காணப்படும். இவ்விரவுமொழிக்குப் பெயர் முதலில் கி. பி. பதினோராம் நூற்றாண்டிலியற்றிய வீரசோழியத்திற் காணப்படுகிறது. அது:

"இடையே வடவெழுத் தெய்தில் விரவிய லீண்டெதுகை
நடையேது மில்லா மணிப்பிர வாளநற் றெய்வச்சொல்லின்
இடையே முடியும் பதமுடைத் தாங்கிள விக்கவியின்
றொடையே துறைநற் பிரளிகை யாதி துணிந்தறியே" (அலங்-40)

என்பது. மணிப்பிரவாளத்துக்கு எதுகையில்லை என்பது இவர் கொள்கை. ஆங்கிலராட்சி இந்நாட்டில் நடைபெறத் தொடங்கிய பின்னர்த் தமிழ்ச் சமாசாரப் பத்திரிகைகள் தோன்றிப் பெருகுகின்றன. "செந்தமிழ்" போன்ற பத்திரிகைகளும் உண்டாயின. மொழிபெயர்ப்புக்களும் வேறு புத்தகங்களும் தமிழ் உரைநடையிலுண்டாயின. சில யாண்டுகளாய் நாவல் எனப் பெயரிய கட்டுக் கதைகள் பெருகி வருகின்றன. இவைகள் உரைநடையில் எழுதப் பட்டாலும் பெரும்பாலும் தமிழை நன்றாய்க்கற்றுணராதவர்களால் எழுதப் படுவதால் தமிழ் நன்றாயிருப்பதில்லை. இன்னும் பல தோஷங்களும் அப்புத்தகங்களிற் காணப்படும். நல்ல தமிழிற் குற்றமின்றி இயற்றப்பட்ட உரைநடைப் புத்தகங்களும் தமிழ்ப் புலவர்களால் இயற்றப்பட்டு வெளிவந்துள்ளன. ராசாங்க நடவடிக்கைத் தமிழை இவற்றோடு சேர்த்து யோசிப்பதிற் பயனில்லை. இனி, பலபல சாத்திரங்கள், சரித்திரங்கள், வேதாந்தம் மற்றுமுள்ள பல விஷயங்கள் ஆகிய வற்றைக் குற்றமற்றதும், தெளிவும் அழகும் வாய்ந்ததுமான தமிழுரைநடையில் எழுதுவதானால் தமிழ்மக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

இனி, உரைநடை எவ்வாறிருக்கவேண்டுமென்பதை எனக்குத் தோன்றியவாறு சொல்லுகிறேன். தமிழிலக்கணத்திற் சந்தியென்று ஒன்றிருப்பது சொற்றொடரின் பொருள் விளங்குவதற்குத் தடை. ஆங்கிலம் முதலிய மேல்நாட்டு மொழிகளிற் சந்தியில்லாதிருப்பது அவைகளின் தெளிவுக்குக் காரணமாயிருக்கிறது. தமிழர் பேச்சு வழக்கிற் சந்தியை உபயோகிப்பதில்லை. அதனால் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறிவதிற் கஷ்டம் இல்லை. உரைநடை அல்லது வாசகத்தை எழுதும் பொழுது வீணான சந்தியிலக்கணத்தைக் கைவிட்டுப் பதங்களைத் தனித்தனியே எழுதவேண்டும். யமகவந்தாதிச் செய்யுள் ஏகபாதம் முதலியவற்றைப் பிரிப்பவரைப் பார்ப்பதனால் நான் சொல்லுவது விளங்கும். ஒரு செய்யுளிலுள்ள சொற்களைப் பலவகையாகப் பிரிப்பதனால் அந்தச் செய்யுள் வெவ்வேறு சொற்றொடர்களை யுடையதாகிப் பலபொருள்களைக் கொடுக்கின்றது. சந்தியிலக்கணத்திற் புணர்ந்த பதங்களை இப்படிப் பிரிக்கிறதோ? அப்படிப் பிரிக்கிறதோ? என்னும் ஐயம் நீங்கும் வரை சொற்றொடரின்பொருள் விளங்காதே. இக்காலத்திற் சில ஆன்றோர் சந்தியிலக்கணத்தைவிட்டுச் சொற்களைத் தனித்தனியே எழுதிவருவதைப்பார்க்க மிகவும் ஆறுதல் உண்டாகிறது.

உரைநடையில் திரிசொற்பிரயோகத்தைத் தவிர்க்கவேண்டும். இயற்சொற்களையே பெரும்பான்மை உபயோகித்தல் வேண்டும். இலக்கணவழுப் புகாமற் காக்கவேண்டும். இழிவழக்கிலுள்ள இயற்சொற்கள் இலக்கணவழுவிலவேனும், அவைகளைத் தவிர்த்தல் வேண்டும். தமிழ்ச் சொற்கள் இருக்கப் பிறபாஷைச் சொற்களைச் சேர்ப்பது தவறேயாம். தாசில்தார், தாலுகா, ஜில்லா, சப்கோர்ட்டு, முனிசிப்கோர்ட்டு, வக்கில் முதலிய பல சொற்கள் மகம்மதியர் ஆட்சிக்காலத்திலும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் தமிழியற் சொற்கள்போல நடைபெற்று வருகின்றன. தமிழ்மக்கள் யாவரும் அவற்றின் பொருளை அறிவர். அவற்றின் பொருளை யுணர்த்தக்கூடிய வேறு பதங்களை அவற்றுக்குப் பிரதியாகச் சொன்னால் அறியார். உதாரணம்:—ஹைகோர்ட்டு என்றால் யாவரும் அறிவர்.

அதை உயர்தரமன்றம் என்று சிலர் எழுதுகின்றனர். அதைப் படிப்போர் அதன் பொருளை யறியாது மயங்குகின்றதைப் பார்த்திருக்கிறேன். அவைகள் முதலிற் பிறபாஷை மொழிகளாயிருந்தாலும் தமிழியற்சொற்கள் போல வழங்கிவிட்டன. "கடிசொல்லில்லை காலத்துப் படினே" (எச்—56) எனத் தொல்காப்பியர் சொல்லியபடி இவை தமிழியற் சொல்லேயாம். நன்னூலார் இவற்றைத் திசைச்சொல் என்பர். "ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினும்—தங்குறிப் பினவே திசைச்சொல் லென்ப" (பெய-16) என்பது அதை விளக்கும். "ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினும்" என்னும் சொற்றொடர் தொல்காப்பியர் திசைச்சொல் இலக்கணம் சொல்லும் சூத்திரத்தொடு நன்னூலார் சேர்த்ததாம். இவ்வகை மொழிகளை ஆளும்பொழுது சிலசமயம் வடவெழுத்துக்களையும் ஆளவேண்டிவரும். தமிழர் அறியாத புது விஷயங்கள் பல உள. ஆங்கில உரைநடைப் புத்தகங்களை எடுத்து விரித்தால் விஷயங்கள் பாராக்களாய்ப் பிரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம், காமா, புல்ஸ்டாப், பாரா என்பவற்றை யுணர்த்தும் தமிழ்ப்பதம் என்னவென்று ஆராய்ந்தால் கிடைப்பதரிது. ஒரே புத்தகம் பல வால்யூம்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. வால்யூம் என்பதற்குச் சரியான தமிழ்ப்பதம் கிடைப்பதரிது. இன்னும் இவை போல்வன பலவுள. ஆங்கிலத்தில் 'ஸென்டென்ஸ்' என்பதை வாக்கியம் என்கிறோம். வாக்கியம் என்னும் பதம் தொல்காப்பியம் நன்னூல் இவைகளிற் காணப்படவில்லை, நன்னூலார் வாக்கியத்தையும் தொடர்மொழி என்பர். புலவர்கள் வாக்கியத்தைத் தொடர்மொழியென்றதை நான் கேட்டதில்லை.

மேல்நாட்டார் சென்ற நூற்றைம்பதாண்டுகளுக்குள், புதிதாய் அநேக விஷயங்களைக் கண்டுபிடித்து அபிவிருத்தி செய்திருக்கின்றனர். சாஸ்திரங்களின் உதவியைக்கொண்டு தொழில்களை விர்த்தி செய்து நாம் முன்னறியாத பல யந்திரங்களைச் செய்திருக்கின்றனர். அவர்கள் மேலான நிலைமையிலிருப்பதற்கு அவைகளும் முக்கிய காரணம். அவர்கள் இந்நாட்டிற் புகவிட்ட அச்சியந்திரம் தமிழ்ப் புத்தகங்களின் பிரதிகளை அளவிறந்தனவாய் அதிசொற்பகாலத்திற்

பெருக்குவதற்கு உதவியாயிருக்கிறது. பண்டைக்காலத்தில் ஓலையேட்டில எழுதிய புத்தகத்துக்கும் அச்சுப்புத்தகத்துக்கும் உள்ள வேற்றுமையை அறியாதார் யாவர்? இது நிற்க ; அந்த சாஸ்திரங்களைத் தமிழில் எழுவதானால் அந்தந்தச் சாஸ்திரங்களுக்குரிய பதங்களைத் (technical terms) தமிழ்ப்படுத்துவது எப்படி என்பதை யோசிக்கவேண்டும். பிரதிபதம் தமிழில் கிடைப்பது அரிது. இப்படித் தங்கள் பாஷையிற் பிரதி சொற்கள் கிடைப்பது அரிதாயிருந்ததால் ஜப்பானியர் மேல்நாட்டுப்பாஷைப்பதங்களை அப்படியே எடுத்துத் தங்கள் பாஷைச் சொற்களாக வழங்கினர். மேல்நாட்டாரோடு நாம் பழக இப்பதங்கள் ஒன்றாயிருப்பது மிகவும் பயன்படுகிறது. பிரதிபதம் கிடைப்பது அரிதாயிருந்தால் நாமும் ஜப்பானியரைப்போலச் செய்யவேண்டும்.

இக்காலத்தில் வாசகமெழுதுவோர் பலர், தாம் சொல்லமேற்கொண்ட பொருள் பிழையறத் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனியாது தாங்கள் எழுதும் உரைநடை திசிசொற்கலந்து படிப்போர் மலைக்கும் வண்ணம் எழுதப்பட்டிருக்கிறதாவென்று கவனிக்கிறார்கள். படிப்போரிற் பலரும் அவ்வகுப்பினரே. அவர்கள் எழுதப்பட்டிருக்கும் பொருளை நோக்காது சொன்னடையையே கவனிக்கின்றனர். சிலர் தாமெழுதும் உரைநடைகளில் மேற்கோள் காட்டுமிடத்தில் 'என்றார் பிறரும்' என எழுதுகின்றனர். அவ்வாறெழுதுவோர் தம்மாற் சுட்டப்படும் சான்றோர் இன்னாரென்றாவது, குறிப்பிட்ட மேற்கோள் அச்சான்றோர் எழுதிய இன்ன நூலில் அல்லது பாட்டில் இன்ன இடத்தில் காணப்படுமென்றாவது எழுதுவதில்லை. தமிழோ அகன்றுபரந்தமொழி. தமிழ்ப்புலவர்களோ எண்ணிறந்தவர். சிலரியற்றிய நூலும் செய்யுளும் பலவாம். ஆதலாற் குறிப்பிட்ட மேற்கோளைக் கண்டுபிடிப்பது அருமையாகிறது. குறிப்பிட்ட புலவரோ அல்லது மேற்கோளோ இன்னார் அல்லது இன்னவை என்று சுட்டிக்காட்டினால் எழுதியவர் தாம் 'என்றார் பிறரும்' என்றதில் அடங்கார் என்னலாம். எழுதியவரேயொரு மேற்கோளைச் சுட்டிக்காட்டினாலும் நமக்கு அது முழுதும் வேறு பொருள் தரலாம். ஆதலால் மேற்கோள் காட்டுபவர் அதை

இயற்றியவரையும் மேற்கோள் உள்ள இடத்தையும் தெளிவாய்ச் சொல்லுவதே நன்றும்.

பொருள்களை விரிக்கப்புகுந்த ஒருவர் 'வல்லார்வாய்க் கேட்டுணர்க' எனத் தாம் எழுதியதை முடிப்பது மிகவும் குறைபாடுடைத்தாம். அவர் செய்கை மை, கடிதம், படிப்போர் காலம் இவற்றை வீணாக்குவதாம்.

நான் சொல்லும் தோஷங்கள் நான் எழுவதில் நிறைந்திருந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது விடவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். எல்லாரும் திருந்தும்போது நானும் திருந்துவேன். உரைநடையைப்பற்றி எழுதுவதை இந்தச்சமயம் இத்துடன் நிறுத்துகிறேன். இப்பொழுது நடைபெறும் செந்தமிழ் முதலிய பத்திரிகைகளைப் பாச்செய்யுளில் நடத்திஞல் எத்தனை பேருக்கு அவை பயன்படும்? 'வல்லார்வாய்க் கேட்டுணர்க' என்று நம்மவர் எழுதுவது ஸபலமாகும்.

மேலும், தேசசரித்திரம் ஆன்றோர் சரித்திரம் முதலியவை தமிழிற் கிடையா. பலவகைச் சரித்திரங்களும் உண்மைப்பொருளை அமைத்து இயற்றப்படவேண்டும். கி. பி. எட்டாம் நூற்றாண்டு தொடங்கித் தமிழரசர்கள் பல செயல்களைக் கோயில் மதில் ஸ்தம்பம் முதலியவைகளிற் பொறித்திருப்பதாய்ச் சாஸன பரிசோதகர்களால் தெரியவருகிறது. அவைகளிற் கலியப்தம் அல்லது சகாத்தம் கண்டிருப்பவை மிகச்சிலவே. பலவற்றில் இன்ன அரசனது ஆட்சியில் இத்தனையாவது ஆண்டு என்று கண்டிருக்கிறது. அவ்வரசனது ஆட்சி தொடங்கியகாலம் தெரிந்தாற் கல்வெட்டிற் கண்டிருக்கிற ஆண்டு இன்னதென்று சொல்லலாம். அதைக்காட்டியிருக்கவில்லை. பல கல்வெட்டுக்களிற் சோழர்களாயிருந்தால் ராஜகேசரிவர்மன் ஆட்சியிலென்றாவது, பரகேசரிவர்மன் ஆட்சியில் என்றாவது எழுதியிருக்கும். அந்த இரண்டு பட்டங்களும் சோழ வமிசத்தரசருக்கு மாறி மாறி வருபவையாதலால் இன்ன சோழன் காலத்துச் சாஸனம் என்று கண்டுபிடிப்பது கஷ்டம். பாண்டியர்களாயிருந்தால்

ஜடாவர்மன் அல்லது மாறவர்மன் என்னும் பட்டங்கள் மாறிவருவதுண்டு. சாஸனத்திற் பட்டப்பெயர்மட்டும் கொடுத்திருப்பவை பல. சாஸன பரிசோதகர்கள் இவ்வளவு கஷ்டத்திலும் தமிழரசர்கள் சரித்திரத்தையும் அவர்கள் காலத்தையும் அநேகமாய்க் கண்டுபிடித்துவிட்டார்கள். நம்மவர்களின் முழுமுயற்சியிருக்குமானால் தமிழ்நாட்டுச் சரித்திரத்தை கி. மு. பல நூற்றாண்டுகளுக்கு முன் தொடங்கி நாளிதுவரை கூடிய சீக்கிரத்தில் ஒருவாறு எழுதிவிடலாம். சான்றோர்கள் சரித்திரமும் அவ்வாறே. நமது நாட்டிற் சரித்திரத்தையாவது முக்கிய சங்கதிகள் நிகழ்ந்த தெய்திகளையாவது எழுதிவைக்கும்வழக்கம் இல்லை. தமிழர் ஊழிஎன்று சொல்லுகிறார்கள். ஊழியை வரையறுத்துக் கூறுவோர் ஒருவரையுங் காண்கிலேன். அது, பொதுவாய் நீண்டகாலம் என்றுமட்டும் பொருள்படும். ஆரியர்கள் யுகம், சதுர்யுகம், மனுவந்தரம், பிரமகற்பம் முதலாகிய கணக்கில் சம்பவம் சொல்லுகின்றனர். அது மனத்திற் கெட்டாத நீண்டகாலத்தைக் காட்டும். சீனர், ஜப்பானியர், மேல்நாட்டார் எல்லாரும் சரித்திரங்களைக் காலக் குறிப்புடன் எழுதிவைத்திருக்கிறார்கள். நமது நாட்டார் பலவகைச் சரித்திரங்களையும் இனியாவது எழுதிவைக்க முயலவேண்டும். பெரியோர்கள் சரித்திரம் மிகவும் பயன் தரக்கூடியவை. ஆங்கிலேயர் புலவர் சரித்திரங்களைத் தொன்றுதொட்டுக் காலக்கிரம வரிசையிற் புலவர் காலம், சரித்திரம், அவரியற்றிய கிரந்தங்கள், சாஸ்திரங்கள், அவை ஒவ்வொன்றின் ஸாராம்சம், ஒவ்வொன்றின் முக்கியமான பாகங்கள், அவற்றைப்பற்றிய அபிப்பிராயங்கள் முதலிய யாவற்றையுங் கண்டு நான்கு பெரியவால்யூம் அடங்கிய புத்தகத்தை எழுதியிருக்கிறார்கள். பலவகை ஆங்கிலப்புலவர் விருத்தாந்த முழுவதையும் அதிற் பார்க்கலாம். காலக்கிரமமாய் இவ்வாறெழுதுவதனாற் கல்வி ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு காலத்திற் பெருகினதும் சுருங்கினதும் மாறினதும் தெரியும். அர்த்தமாகாத கிரந்தம் கல்வியின் சரித்திர ஆராய்ச்சியால் அர்த்தமாகவும் கூடும். நாம் தவறாகப் பொருள் செய்திருந்தால் இவ்வித ஆராய்ச்சியாற் சரியான பொருளை அறிந்து திருத்திக்கொள்ள ஏதுவாகும். சிலர் புலவர் சரித்

திரத்தை அகராதிக்கிரமமாக எழுத முயலுகின்றனர். சிலர் புலவர் இருந்த காலத்தை ஆராய்வது மிகவும் குறைபாடுடையதாம் என்கின்றனர். அவர்கள் தமது கூற்று தமிழபிவிர்த்திக்கு எவ்வளவு தடையைச் செய்யுமென்பதைச் சிறிதும் உணரவில்லை. தமிழாராய்ச்சியிலும், தமிழர் சரித்திர ஆராய்ச்சியிலும் அதிநிபுணர்களான ஸ்ரீமான்கள் கோபிநாதராயர், வெங்கையா, கனகசபை பிள்ளை ஆகிய இவர்களைப் பாலியத்திலேயே இழந்தது தமிழரது தௌர்ப்பாக்கியமேயாம்.

மேல் நாட்டிலுண்டாகியிருக்கும் சாஸ்திரங்களை அல்லது கலைகளைத் தமிழில் எழுதிப்பரப்புவது அவசியமென்று முன்னமே சொன்னேன். நம்மவர்கள் அவைகளை நன்றாய்க் கற்றுணர்ந்து மற்றவர்களும் அறியும் வண்ணம் எளிய நடையில் தமிழில் எழுத வேண்டும். படிப்போர் படிப்படியாய்க் கற்பதற்கேற்றபடி புத்தகங்களை அமைத்தல்வேண்டும். சில வேளை மொழிபெயர்ப்புக்களும் செய்யலாம். இவ்வாறு செய்வதனற் பலவகையிலும் தமிழ்மக்களின் அறிவு அபிவிர்த்தியாவதோடு விவசாயம், தொழில், வியாபாரம் முதலிய எல்லாம் அபிவிர்த்தியாகும். முற்காலத்தில் 64 கலைகள் இந்நாட்டில் இருந்தனவென்கிறார்கள். அவைகளிற் பலவற்றின் பெயர்களைமட்டும் நாம் பண்டைப் புத்தகங்களிற் பார்க்கலாம்.

தமிழ்ப்பதங்களெல்லாம் அடங்கிய தமிழகராதி இல்லை. உள்ள அகராதிகளிற் சில பதங்களுக்குப் பிழையான அர்த்தங்களும் காணப்படும். முற்காலத்தில் நூற்செய்யுளில் நிகண்டுகள் என்று எழுதியவை சிலவுள. அவைகளில், தமிழ்ப்பதங்கள் எல்லாவற்றையுங் காண்பது அரிது. அவற்றில் அகராதி முறையில் எழுதப்பட்டனவும் உள. வெளித்தேசத்திலிருந்து இந்நாட்டில் வந்திருந்த வீரமாமுனிவர் என்னும் ஜெஸுயிட் பாதிரியார் (Father Beschi) முதலில் தமிழுரை நடையிற் சதுரகராதியை எழுதினர். தமிழ்ப்பதங்களெல்லாம் அடங்கியதும், அவற்றின் எல்லாப்பொருள்களும் அடங்கியதுமான தமிழகராதியில்லாதது குறைவே. பதங்கள் ஒவ்வொரு பொருளிலும் பிரயோகிக்கப்பட்டிருப்பதற்கு உதாரணங்களும் அதிற் காட்டப்படவேண்டும். பதங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டிய எல்லாவற்றையும் எழுதி ஒருவிதக் குறைபாடுமில்லாததாய் அதை அமைத்தல் வேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழ்ப் புத்தகசாலைகளும் தமிழ் வாசகசாலைகளும் போதிய அளவு இல்லை. இரண்டு வருடத்துக்குமுன் யான் விசாரித்தபோது தெலுங்கர் சிலர் தங்கள் சுய முயற்சியால் 5, 6 ஆண்டுகளுக்குள் 600 புத்தகசாலைகளும், வாசகசாலைகளும் பல

இடங்களில் ஸ்தாபித்தார்களென அறிந்தேன். தமிழர்கள் ஒவ்வொன்றும் அரசாங்கத்தார் செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பது பயனற்றதெனத் தோன்றுகிறது. வங்க நாட்டாரும் மகாராஷ்டிர தேசத்தாரும் தங்களுடைய முயற்சியால் மேலான நிலைமைக்குத் தங்கள் பாஷைகளைக் கொண்டுவந்திருக்கின்றனர். தெலுங்கர்கள் பாஷாபிவிர்த்திக்கு நன்முயற்சி செய்கின்றார்கள். நேற்றுப்பிறந்த மலையாள பாஷை அபிவிர்த்தி செய்யப்படுகிறது. இந்தப்பாஷைகளுக்கெல்லாம் முற்பட்டதும் மேன்மையுடையதுமான தமிழ், தமிழரது அசட்டையாற் குன்றியிருக்கிறது. தமிழ்மொழி பேசுவோர் 150 லக்ஷம் பேர் சென்னை ராஜதானியில் உளரென்பது ராஜாங்கத்தாரின் பழைய கணக்காற் றெரிந்தது. இப்பொழுது எங்குமுள்ளவர்களின் தொகையைக் கணக்கிட்டால் அத்தொகை 200 லக்ஷத்தை யெட்டுமென்று தோன்றுகிறது. தமிழபிவிர்த்திக்கென்று இவர்கள் தங்களாலியன்ற தொகையை அவர்கள் ஜன்மத்தில் ஒரு தடவையிற் கொடுத்தாற் சராசரி ஒருவர்க்கு ஒரு ரூபா வீதம் கிடைக்காதா? தமிழினிடத்து அன்பு பாராட்டும் அறிஞர்களும் நாட்டிலுள்ளாரனைவரும் சேர்ந்து ஒரு சபை ஸ்தாபித்து ஒத்தமனத்துடன் உழைத்தால் உயர்ந்தது ஒருவருடத்திற்குள் இது முடியும். நாடு முழுவதையும் பங்கிட்டு ஒவ்வொருபங்கையும் ஒருவரிடத்திலோ பலரிடத்திலோ ஒப்படைத்து இப்பங்கில் ஜனத்தொகை இவ்வளவு; அவர்கள் நிலைமை இன்னது; இத்தனை ரூபா சேகரித்துக்கொடுப்பது உங்கள் பொறுப்பு என்று ஏற்பாடுசெய்யவேண்டும். 200 லக்ஷ ரூபா சேகரிப்பது பெரிதன்று. எல்லாரும் முழுமனதுடன் வேலை செய்யவேண்டும். தமிழ் நாட்டில் ஜமீந்தார்களும், நிலப்பரப்பு அதிகம் உடையவர்களும், பெருத்த வியாபாரிகளும் பலர் இருக்கிறார்கள். அன்றியும் சைவ வைஷ்ணவ மதங்களைத் தமிழ்வாயிலாய்ப் பரப்புவதற்கென்று ஏற்பட்ட மடங்களும், பரோபகாரத்தின் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டதும் பெருவருவாயுடையதுமான தர்மஸ்தாபனங்களும், ஆலயங்களும் முதலிய பலமார்க்கங்கள் உள. சோழ அரசர்கள் காலத்தில் ஆலயங்களில் வித்தை கற்பிக்கப்பட்டுவந்தது என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது. தமிழர்களான நாட்டுக்கோட்டை நகரத்தார் கோயில் கட்டுவதிற் பணம் செலவழிப்பதுபோல மதாபிமானத்தைப் பரப்புவதற்கு முக்கிய காரணமாயுள்ள தமிழ்க்கல்விக்கென்றும் சில ஆண்டுகளுக்குக் கொடுத்துவந்தாற் பெருந்தொகை சேருமே. தமிழ்பேசுபவர்களாயும் தமிழில் அபிமானமுள்ளவர்களாயுமுள்ள இஸ்லாமிய, கிறிஸ்தவப் பிரபுக்கள் எத்துணையர் உளர்? அமெரிக்காவிற் கல்வியபிவிர்த்திக்காகப் பெருந்தனத்தைப் பிரபுக்கள் கொடுக்கின்றனர். கிரோசின் எண்ணெய் வியாபாரத்தால் திரண்டமுதல் குவித்திருக்கிற ராக்பெல்லர் என்பவர் கல்வியபிவிர்த்திக்காக ஒரு

தடவையில் 9 கோடி ரூபா கொடுத்தார். அப்படிக் கொடுக்கும் தனவந்தர் அந்நாட்டிற் பலர். இக்காலத்திற் றமிழை அபிவிர்த்தி செய்துவந்த தமிழரசர்களில்லை. ராஜாங்கத்தார் ஆங்கிலேயர்; தமிழின் அருமை அறியாதவர். பிறநாடுகளில் நடப்பதுபோலநமது நாட்டார் தங்கள் முன்னேற்றத்திற்கு வேண்டியவற்றை ஏன் தாங்களே செய்து கொள்ளக்கூடாது? முயற்சி செய்தால் முடியாத காரியமும் உளதா? இரண்டு கோடி ரூபாவின் வட்டித் தொகையைக்கொண்டு தமிழபிவிர்த்தியைத் தாராளமாய்ச் செய்யலாமே. தமிழினிடத்து உண்மையன்போடு உழைப்போர் பலர் வேண்டும். பட்டத்திற்கும் பதவிக்கும் பாடுபடுவோர் தமிழரில் எத்துணையர் உளர்? சட்டசபையின் அங்கத்தினராக அழிக்கும் தொகை எவ்வளவு? ஒருவர் ஒருலக்ஷரூபா செலவழித்தனராம். சட்டசபை அங்கத்தினராயிருக்கப்போவதோ சில ஆண்டுகளே. அங்கத்தினராயும் செய்யும் காரியமென்ன? ஒருதடவை ஒரு தமிழர் முனிசிபல் கௌன்சிலராகச் சுமார் 20,000 ரூபா செலவழித்ததை நான் அறிவேன். மற்றொருவர்தேவஸ்தானம்கமிட்டி மெம்பராகச் செலவழித்தது 60,000 ரூபாவை எட்டும். பட்டம் அடைவதற்குச் சிலர் அழிக்கும் தொகையைக் கேட்டால் ஒருவரை பிரமிக்கச்செய்யும். ஒருவர் ஒருதடவையில் 70,000 ரூபா செலவழித்தனர் என்கின்றனர். பலர் பிறர் மெச்சச்சொல்லிக் கொள்ளுவதுபோல் உண்மையான அன்பு தமிழினிடத்து வைத்திருப்பாரானால் தமிழ்க்கல்வி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் ஓங்கிப் பரவுமே. தமிழ் வித்தியாசாலைகளும், சங்கங்களும், பத்திரிகைகளும் பெருங்கணக்கினவாய் ஏற்படவேண்டும். புத்தகங்களைச் செவ்வனே அச்சிடப்பட்டுக் கிரமமான விலைக்கு—முட்டின்றி யாவர்க்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும். தமிழ்ப்புலவர்களனைவரும், தமிழுக்கு அன்பு பூண்ட செல்வவந்தர் முதலியோரும் ஆண்டுக்கொருமுறையாவது பலநாள் கூடியிருந்து பாஷாபிவிர்த்திக்குரிய உபாயங்களை ஆராய வேண்டும். தமிழினிடத்து உண்மையன்பும் ஒத்தமனமுமிருந்தால் தமிழ்மொழி உலகத்திலுள்ள எந்த மொழிக்கும் எவ்வகையிலும் தாழ்ந்ததன்றென்று சொற்ப காலத்திற் காட்டலாம். தமிழுக்கென்று உண்மையில் உழைத்தவர்களிற் காலஞ்சென்ற சில பெரியோர் பெயரை ஈண்டுக் குறிக்கின்றேன். அவர்கள் ஸ்ரீமான்களான ஆறுமுகநாவலர்,பாண்டித்துரைச்சாமித்தேவர்,தாமோதம்பிள்ளை, கனகசபைபிள்ளை என்பவராவர். இவர்கள் காலத்திற்குமுன் பலர் இருந்தனர். பாண்டித்துரையில்லாவிட்டால் இப்பொழுது மதுரையில் நிலைபெற்றிருக்கும் தமிழ்ச்சங்கமேது? செந்தமிழ்ப் பத்திரிகையேது? வித்தியாசாலை யேது? சங்கத்தச்சில் வெளிவந்துள்ள புத்தகங்கள் ஏது? ஆறுமுகநாவலர் பொன் நில மாதராசையை அறத்துறந்து நல்லபதவி பெறுவதை வெறுத்துத் தமிழையும் கடவுளி

...த்தன்னையும் பரவச்செய்வதே பிறந்தபயன் எனக்கொண்டு இரவும் பகலும் உழைத்தனர். தம் முயற்சிக்கு நேரிட்ட இடையூறுகளை அவர் பொருட்படுத்தவில்லை. வண்ணார்பண்ணையில், சைவப்பிரகாச வித்தியா சாலையை நிலைநாட்டி அதை நடத்தக் கையிற் பொருளில்லாமல் அரிசிப்பிச்சையெடுத்து அதன் உதவியைக் கொண்டு நடத்தினர். சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை யாரும் கொண்டாடும்படி செவ்வனே நடைபெறுகின்றது. இவர் அச்சிற்பதித்து வெளியிட்ட தமிழ்ப்புத்தகங்கள் எத்தனை? அவர் ஒருவர் முயற்சியால் தமிழ்க் கல்வி எவ்வளவு பரவியது? பல ஆறுமுக நாவலர்களை அவதரிக்கச் செய்யவேண்டுமென்று கடவுளை பிரார்த்திக்கிறேன். தாமோதரம்பிள்ளை கனகசபைபிள்ளை இருவரும் உத்தியோகத்திலிருந்தவராயிருந்தும் தமிழுக்கு உழைத்ததை அறியாதார் யாவர்? இவர்கள் மேகத்தைப் போல் ஒருவகைக் கைமாறும் வேண்டாது உழைத்தவர்களாவார்கள்.

தமிழைக்கற்றறிந்தோரெல்லாம் தமிழ்க்கல்வியைப் பரப்புவதற்கு முயலவேண்டும். சிலர், இலக்கணக்கொத்துடையார் "முற்காலத்துப் போதகாசிரியர்—மொழிகுவர் மறையார் அருமையாம் விதிகளை—வழி வழி நின்று வழங்கற் பொருட்டே" "இக்காலத்தார் என்பய னினைந்தோ—இசையார் தாமு மிசையார் பூமியில்" (பாயிரம் 11) என்று கூறியதற்கு இலக்காகின்றனர். அவர்கள் ஒழுக்கம் மாறவேண்டும். சான்றோர் ஒருவர் கூறிய வார்த்தைகளை எழுதி இதை இம்மட்டில் முடிக்கின்றேன். அது, "தங்கள் சுபபாஷையின் வன்மையாகிய செல்வம் கொள்ளை போய்க்கொண்டிருக்கும்பொழுது ரோஷமாவது முயற்சியாவது இல்லாமல் வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கும் அறிவீனத்தை மேற்கொண்டநாட்டார் பிறருதவியை நாடாது தன்முயற்சியுள்ள ஜனங்களுக்குரிய மதிப்பையும் மரியாதையையும் இழந்துபோகிறார்கள்; நாகரிகம் பெற்ற உலகிலுள்ள நாட்டார்களிடையே தங்களுக்குக்கிடைத்திருக்கக்கூடிய அந்தஸ்தினின்றும் தாழ்த்தப்படுகிறார்கள்" என்பது.

தமிழ்மொழி தழைத்தோங்கி எல்லாத்துறைகளிலும் வளரத் தக்க ஊக்கத்தையும் முயற்சியையும் தமிழ் மக்களுக்குக் கொடுத்து எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக. சுபம். சுபம். சுபம்.

முற்றும்.